AstroVed

ஆகஸ்ட், 2022

# சத்வித்யா

மாலை: 3

மலர்: 34

பிரின்ஸ் இன்ஃபோ பார்க், பிளாட் எண்.81-பி, ஏ-பிளாக், 4வது தளம்,
2வது பிரதான சாலை, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை 600058.

ஆன்மீக விஞ்ஞான இதழ்

இணையதளம் வாயிலாக மாதம் ஒரு முறை வெளிவரும்



அமானுஷ்ய ஆற்றல்களை அளிக்கும் நித்யா தேவி யந்திரம்

கோடி இன்பம் அருளும் குமரக் கோயில்

வேண்டியதைத் தந்தருளும்

## இருக்கன்குடி மாரியம்மன்!!

அனைத்து இதழ்களையும் AstroVed.com இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்து பயன் பெறலாம்
மேலும் விபரங்களுக்கு போன்: 88702 88701, www.astroved.com



வசதி படைத்தவர்கள் தனியார் பள்ளிகளில் உயரிய கல்வியையும் வறுமையில் உழல்வோர் அரசு பள்ளிகளில் சாதாரண கல்வியையும் பயில்வதாய் சொல்கிறார்கள்.

ஆனால், எந்த பள்ளியில் எத்தகைய கல்வியைப்பெற்றாலும் அது நம் பேரறிவை வளர்ப்பதாய் இருத்தல் வேண்டும். இந்த பேரறிவை புகட்டுகின்ற "திருமந்திரம்" போன்ற நூலினை கற்றுக் கொடுக்க வேண்டும். திருமந்திரம் என்பது பேரறிவின் திறவுகோல் என்றாகுமே தவிர, அது ஒரு சமயம் சார்ந்த நூல் என ஒதுக்கி விடக் கூடாது! எச்சமயம் சார்ந்தோருக்கும் பேரறிவைத் தருகின்ற அரிய கருத்துக்கள் அடங்கிய
திருமந்திரப் பாடல்கள் அனைத்து கல்விச்சாலைகளிலும் எந்தவித பாரபட்சமுமின்றி கற்றுத்தந்தாலே பேரறிவு வளரும்.

Dr. Baskaran Pillai




நமது இந்திய தேசம் சுதந்திரமடைந்து முக்கால் நூற்றாண்டை நெருங்கிவிட்டது! இந்த நிலையில் நமது இந்தியா பெற்றுள்ள வளர்ச்சி என்பது கொஞ்சம் ஆச்சரியத்தையே ஏற்படுத்துவதாய் உள்ளது.

விவசாயத்தை மட்டுமே நம்பியுள்ள பெரும்பான்மை மக்கள் அத்துறையை எப்படி வளர்த்தெடுத்தார்கள்? இந்த காலகட்டத்தில் வேளாண்மை துறையில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றங்கள் என்னென்ன? என்பதை ஆராயும் போது நமது நாட்டில் மக்கள் தொகைக்கு ஏற்ப, அளவான முறையில் தொழில்நுட்பங்களும் கருவிகள், இயந்திரங்கள் ஆகிய அனைத்துமே மக்கள் தொகை பெருக்கத்திற்கு ஈடு செய்யும் வகையில் வளர்ச்சியடைந்துள்ளன.

வேளாண்மைமட்டுமின்றி, தொழில்துறை, ஏற்றுமதி,
ஜவுளித்துறை, கட்டுமானத்துறை என அனைத்திலுமே வளர்ந்த நாடுகளுக்கு இணையான தன்னிறைவைப்பெற்றிருக்கின்றோம் என்பது மாபெரும் சாதனை தானே!?

விண்வெளி ஆராய்ச்சியில் வல்லரசுகளே வாய்பிளக்கும் அளவிற்கு நமது அரிய சாதனைகளை படைத்துள்ளோம்! எவ்வளவோ ஏற்றங்கள், எத்தனையோ மாற்றங்கள்!... ஆனாலும் பண்பாடும் கலாச்சாரமும் மாறாமல்- மறையாமல், நமது ஆன்மீக சிந்தனைகள் அழியாமல் மற்ற நாட்டினரால் போற்றப்படுகிறது. இந்த அழியாத தெய்வசக்தி நமது நாட்டினை மேலும் காத்திட உறுதிகொள்வோம்.

அன்புடன்
(அச்சிட்டு வெளியிடுவோர்)
ஆஸ்ட்ரோவேட்.காம்

அன்பு சத்வித்யா வாசகர்களே! இதுவரை இணையதளத்தில் வெளியாகி, எல்லையில்லா ஆன்மீக செய்திகளை அள்ளித் தந்து கொண்டிருக்கும் நமது சத்வித்யா இணையதள மாத இதழ், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க விரைவில் புத்தக வடிவில் உங்கள் கரங்களில் தவழவிருக்கிறது என்பதனை பெரு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

என்றென்றும் உங்கள் ஆதரவை வேண்டும், Astroved.com மாத இதழ்

அன்புடன்
Astroved.com



# ஆகஸ்ட் மாத காலண்டர் – 2022

## ஆகஸ்ட் — ஸ்ரீ சுபகிருது வருடம் ஆடி - ஆவணி — AUGUST 2022

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **SUN** ஞாயிறு | அரசினர் விடுமுறை:<br>9. மொஹரம் பண்டிகை<br>15. இந்திய சுதந்திர தினம்<br>19. கோகுலாஷ்டமி<br>31. ஸ்ரீ விநாயகர் சதுர்த்தி | தசமி **7** ஆடி 22 | **14** 29 | தசமி **21** 05 | **28** 12 |
| **MON** திங்கள் | சதுர்த்தி **1** 16 | ஏகாதசி **8** 23 | இந்திய சுதந்திர தினம் **15** 30 | **22** 06 | **29** 13 |
| **TUE** செவ்வாய் | **2** 17 | பிரதோஷம் **9** மொஹரம் 24 | **16** 31 | ஏகாதசி **23** 07 | **30** 14 |
| **WED** புதன் | ஷஷ்டி **3** 18 | **10** 25 | ஷஷ்டி **17** ஆவணி 01 | **24** 08 | ஸ்ரீ விநாயகர் சதுர்த்தி **31** 15 |
| **THU** வியாழன் | **4** 19 | பௌர்ணமி **11** 26 | **18** 02 | சிவராத்திரி **25** 09 | இந்துக்கள் பண்டிகை:<br>1. ஆடிப்பூரம்<br>2. கருட பஞ்சமி<br>3. ஆடிப்பதினெட்டாம் பெருக்கு விழா<br>5. வரலட்சுமி விரதம்<br>10. சாஸ்தான்கோவில் நடை<br>11. ஆவணி அவிட்டம்<br>15. மஹா சங்கடஹர சதுர்த்தி<br>19. கோகுலாஷ்டமி<br>20. பஞ்சராத்திர ஜெயந்தி<br>31. ஸ்ரீ விநாயகர் சதுர்த்தி |
| **FRI** வெள்ளி | அஷ்டமி **5** 20 | **12** 27 | கார்த்திகை அஷ்டமி **19** 03 | அமாவாசை **26** 10 | முஸ்லீம் பண்டிகை:<br>9. மொஹரம் பண்டிகை<br>வளர்பிறை சுபமுகூர்த்த நாட்கள்<br>29, 31<br>தேய்பிறை சுபமுகூர்த்த நாட்கள்<br>21, 22, 24<br>கரி நாட்கள்<br>5, 16, 25 |
| **SAT** சனி | நவமி **6** 21 | வங்கி விடுமுறை **13** 28 | நவமி **20** 04 | அமாவாசை **27** 11 | [illegible] |

www.dailycalendartamil.com

### நரசிம்மரின் உக்கிரம் தணிந்த தலம்

# நல்லதை நடத்தித் தரும் யானைமலை யோக நரசிம்மர்

மதுரை அருகே உள்ள யானை மலை ஒத்தக்கடை என்ற இடத்தில் உள்ளது யோக நரசிம்மர் ஆலயம். மிகவும் பழமை வாய்ந்த இந்த ஆலயத்தில் மூலவராக யோக நரசிம்மர் வீற்றிருந்து அருள்பாலிக்கிறார். தாயார் பெயர் நரசிங்கவல்லி என்பதாகும். ஆலய தீர்த்தம் சக்கர தீர்த்தமாகும். இது ஒரு குடைவரைக் கோவிலாகும். நரசிம்மர் வீற்றிருக்கும் ஆலயங்களிலேயே, மிகப்பெரிய உருவத்தை கொண்ட ஆலயம் இது என்பது தனிச் சிறப்பாகும்.

## தல வரலாறு:

உரோமச முனிவர், தனக்கு புத்திர பாக்கியம் வேண்டி, இந்த யானை மலை தலத்திற்கு வந்து சக்கர தீர்த்தத்தில் நீராடி யாகத்தை தொடங்கினார். மேலும் நரசிம்மரை, அவரது நரசிம்ம அவதார கோலத்திலேயே தரிசிக்கவும் விரும்பினார். இறைவனும் உரோமச முனிவரின் விருப்பப்படியே, உக்கிர நரசிம்மராக தோன்றி காட்சி தந்தார். ஆனால் நரசிம்மரின் உக்கிர கோல வெப்பத்தால் உலகமே தகித்தது. இதனை தாங்கிட முடியாமல், தேவர்களும், முனிவர்களும் பிரகலாதனிடம் சென்று முறையிட்டனர். பிரகலாதனும் இத்தலத்திற்கு வந்தார்.



திரு. கிருஷ்ணன்
ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர்

ஆனால் நரசிம்மரின் உக்கிரம் குறைந்ததே தவிர, வெப்பம் முற்றிலும் நீங்கவில்லை. இதையடுத்து அன்னை மகாலட்சுமியிடம் அனைவரும் முறையிட்டனர். மகாலட்சுமியும் இத்தலத்திற்கு வந்தார். அதன்பிறகே நரசிம்மரின் உக்கிரம் முழுமையாக மாறி தணிந்தது. மேலும் அன்னை மகாலட்சுமியை ஆலிங்கனம் செய்தபடி, யோக நரசிம்மராக, கேட்டதை வழங்கும் வள்ளலாக இத்தலத்தில் நரசிம்மர் அருள்புரிகிறார்.

இத்தலத்தில் இருக்கும் யோக நரசிம்மர், தன் மார்பினில் மகாலட்சுமியை தாங்கியபடி மேற்கு திசை நோக்கி அருள்பாலிக்கிறார். இந்த ஆலயத்தில் கொடி மரம் இல்லை. பொதுவாக கொடி மரம் என்பது, கருவறைக்கு மேலுள்ள விமானத்தின் நீளம், அகல அளவைப் பொறுத்ததே. ஆனால் இத்தலத்தில் கருவறைக்கு மேல், யானை மலை மிகவும் உயர்ந்து காணப்படுவதால் கொடி மரம் வைக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

நரசிம்மராக அவதாரம் எடுத்தது, தேய்பிறை சதுர்த்தி காலத்தில் தான். எனவே அந்த நேரத்தில் இந்த யோக நரசிம்மரை வழிபட்டால், கல்வி சிறக்கும். வியாபாரம் விருத்தியாகும். எதிரி பயம் விலகும். மரண பயம் அகலும். அதே போல் நரசிங்கவல்லி தாயாரை வணங்கினால் திருமணத் தடை நீங்கும். கோபம் குறைந்து அமைதியான வழியில் செல்ல வழி ஏற்படும் என்பது அனுபவ உண்மையாகும்.

இந்த ஆலயத்தின் அருகே உள்ள தீர்த்தத்தில் மாசி மாத பவுர்ணமி தினத்தன்று கஜேந்திர மோட்ச விழா சிறப்பாக நடத்தப்படுகிறது. திருவண்ணாமலையைப் போலவே இங்கும் ஒவ்வொரு பவுர்ணமி தோறும் கிரிவலம் நடைபெறுகிறது. இத்தலத்தில் சிவபெருமானுக்கு நடக்கிற பிரதோஷம் போல, நரசிம்மருக்கு பிரதோஷ பூஜை நடப்பது மிகவும் சிறப்பானதாகும்.

அமைவிடம் :

மதுரையில் இருந்து சென்னை செல்லும் தேசிய நெடுஞ்சாலையில், மதுரை மாட்டுத்தாவணி பஸ் நிலையத்தில் இருந்து சுமார் 8 கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது யானை மலை ஒத்தக்கடை. இங்கிருந்து மினி பஸ்களில் 2 கிலோமீட்டர் மேற்கே சென்றால் கோவிலை அடையலாம்.





# இறை நெய்தலுக்கு ஏது ஒய்தல்....

மகிழும் மலர்களுக்குத்தான் எத்துணை மாண்பு! மகிழ்வதும் உன்னத உணர்வு! மகிழ வைப்பதோ ஒப்பற்ற உணர்வு!

யாம் பெற்ற இன்பம் இவ்வையகமும் பெற வேண்டும் என்ற விழைவு அருளாளர்கள் கொண்டிருந்தார்கள்.

பாறையாய் சில மனங்கள் இருக்கத்தான் செய்கின்றன. பக்திசோலை யாக்குவதும் இறைவனின் இனிய திருவிளையாடலே, அருள் இல்லார்க்கு அவ்வுலகு மட்டுமல்ல இவ்வுலகும் இல்லை. இறை நாமத்தை சொல்லாத நாளில்லை என்பார்கள் இறையருட் செல்வர்கள். பேசா நாளே பிறவா நாள் என்றார்கள் ஆன்றோர்கள். இறை அச்சம் தேவைதான்! ஆனால் ஒரு குழந்தை கள்ளம் கபடு அற்ற ஆசையுடன் தாவி வருகிறதே

அந்த மழலையின் மனநிலையோடு ஈஸ்வர பக்தி செலுத்தும் போது அச்சம் காணாமல் போய்விடும் தூய அன்பே மிச்சமிருக்கும்.

முப்பொழுதும் ஞான முதல்வனாம் இறைவனையே எண்ணி எண்ணி களிப்புறும் உள்ளமே இறைவன் வாழும் இல்லம்!

எல்லாம் இறை செயல் என்ற அசைக்க முடியாத உறுதியும், ஆர்வத்துடன் கூடிய நற்செயல்களும், நற்சிந்தனைகளுடன் நல்வழியில் மட்டுமே நம்மை உயர்த்தக்கூடியவை. இறையருளால் எதுவும் முடியும் என்றாவது ஒரு நாள் விடியும் என்ற இறை நம்பிக்கையுடன் வாழத் தலைபடுகிறபோது எவ்வித தடைகளும் காணாமல் போய்விடும்.

தரை காய்ந்தால் தண்ணீர் கொண்டு சரி

செய்யலாம், மனம் காய்ந்தால் எதை ஊற்றி சரி செய்ய இயலும்?

மனம் நிறைவுடன், பரிபூரண மகிழ்ச்சியுடன் இறை புகழை போற்றிய படி நாம் நமது இல்லற கடமைகளை சரியாக செய்கிறபோது அவை நல்லறமாக அமைந்துவிடும்.

படகோட்டியின் கவனம் படகை செலுத்தும் வரை. உழவனின் கவனம் விளைச்சல் பெறும் வரை. ஆசிரியர்களின் கவனம் மாணவர்களின் இறுதித்தேர்வு வரை. கட்டடத் தொழிலாளர்களின் கவனம் அந்த கட்டடம் முடியும் வரை. தன் ஆயுள் முழுதும் ஒரு தாயின் கவனம் அவள் பெற்றெடுத்த பிள்ளை உயரும் வரை.

இறைவனின் கவனம் இப்பிறவி மட்டுமல்ல வரும் பிறவிகளிலும் ஆன்ம பலம் பெற தொடர்ந்து கொண்டே இருக்கும்.

இயற்கை சக்திகள் இறைவனை மீறி எதுவும் செய்து விடுவதும் இல்லை. தன் சீற்றத்தை வெளிப்படுத்தும் போது கூட மிகுந்த கவனம் செலுத்துகின்றன.

ஒரு கைதேர்ந்த மருத்துவர், தாய்க்கும் அவள் சேய்க்கும் எவ்வித துன்பமும் ஏற்படாதவாறு மகப்பேறு மருத்துவம் பார்க்கும் கவனத்தைப்போன்று அதனினும் பன்மடங்கு மிகுந்த கவனத்துடன் தன்னால் படைக்கப்பட்ட உயிர்களை பாதுகாக்கின்றார், பெரும் கருணைமிகு பெருமான்.

வானத்தில் பறந்து திரியும் பறவை கோபுரத்தின் மீதும் அமர்கிறது,கோட்டை மதில் மீதும் அமர்கிறது ஆனாலும் அதன் நோக்கம் இரைமீது மட்டுமே.

ஆனால், நாம் இரையுடன் நிறுத்திக் கொள்ளாமல் இறையுடன் பயணிக்கிறோம் பாவக் கறை படாமல், பரிசுத்தமான, பவித்ரமான பயபக்தியுடன் பக்தியை இறைவனிடம் செலுத்துவோம்.

நம் வாழ்க்கை என்னும் கப்பலை என்றென்றும் மகேஸ்வரன் மாலுமியாக வீற்றிருந்து நம்மை காத்தருள்புரிந்து கரை சேர்ப்பான் என்றஉள்ள உறுதியுடன் வழிபடுவோம், வளமுடன் கூடிய நலமான வாழ்வை நாளும் பெறுவோம்.



சைவ சித்தாந்த செம்மல்

**கவிஞர். சீனு. செந்தாமரை**

கடலூர்

# அபூர்வசெய்திகள்

"சொல்லுமுப்பந் தோட்டி வரு சோமநாத திசு வரன்மே

னல்ல வுலாவை நவிறுவதற்கு"

என்று இச்சுவடி நூல் தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத் துறைக்கு உட்பட்ட கீழ்திசை ஓலைச்சுவடி நூலகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

## வாமநாதபுர சுவடி செய்தி

வாமநாதபுரமா, அது எங்கே உள்ளது என கேள்விக்குறி எழுந்தால் அதற்கு விடை அது இன்றைய சென்னை மயிலாப்பூர் ஆகும். இவ்வூரின் பின்னணி சிறப்பானது.

ஒரு காலத்தில் பழைய மயிலாப்பூர் பகுதியில் இருந்த ஆலயம் கொண்ட பெயர் நேமிநாத சுவாமி கோயிலாகும். அதனை வழிபட்டு சில சமணர்கள் குடி கொண்டிருந்தனர். அவர்கள் சில தினங்களுக்கு ஒரு முறையாவது ஆலயம் விட்டு வெளி வந்து, அங்குள்ள " உறுப்பு குறைவுற்றோருக்கு இயங்கிவந்த இல்லத்தில் உணவு உட்கொள்ளும் பழக்கம் கொண்டிருந்தார்கள்.



அந்த சமணத்துறவிகளில் ஒருவரின் கனவில் இறைவன் தோன்றி "இன்னும் முனேநாளில் மயிலாப்பூர் கடலுக்குள் மூழ்கி அழிந்துவிடும்," என்று கூறி விட்டு மறைந்து விட்டார். அதனால் அச்சமுற்ற துறவி, நாட்டு அரசனான மயிலமானிடம் ஓடிப்போய் இதனை கூறிவிட்டார். அதனால் ஆடி போய்விட்ட அரசன் விரைந்து செயல்பட்டு, தன் படை வீரர்கள், மக்களுடன் வேறிடம் சென்று அங்கு குடியேறிவிட்டார்.

சமணத்துறவி கனவில் கேட்ட செய்தியின் படியே மயிலாப்பூர் கடலில் மூழ்கிப் போனது. அரசன் மயிலமான், கடல் கொண்டுவிட்ட வாமநாதபுரம் பக்கத்தில் ஒரு புதிய நகரத்தை உருவாக்கி, அதற்கு இட்ட பெயரே" மயிலமான் நகர்"

அரசன் மயிலமானை தொடர்ந்து, மயிலமான் நகரை ஆட்சி புரிய வந்த சந்ததியினராக"மயில்பூசிதராசன்,சமந்தபத்திரராசன்,சாந்தகுணசீலன்,வரமண்டனாதன் ஆகியோர் விளங்கினர்.

பல ஆண்டுகள் கழித்து வேறொரு சமண முனிவரின் கனவில் வந்த"நேமிநாத சுவாமி" மயிலைமான் நகருக்கும் ஆபத்து! சீக்கிரம் அதுவும் கடலில் மூழ்கிவிடும்" என எச்சரித்து மாயமானாராம்!.

வேறுவழியின்றி அப்போதைய, மயிலை மன்னன், அந்த நகரையும் காலிசெய்து மொத்த பேரோடு, அதன் சமீபம் இருந்த ஆப்பூருக்கு குடிபெயர்ந்து விட்டான். அவ்வூருக்கு பழைய நகரின் பேருடன் இணைத்து"மயிலாப்பூர்" என்ற பெயரை இட்டுவிட்டான் மன்னன்.

இவ்விவரங்களும் தமிழக அரசு நிர்வகிக்கும், சுவடி நூல்களில் ஒன்றில் இடம்பெற்றுள்ளன.

# முப்பது வெட்டி

தொண்டை நாட்டில் உள்ள ஒரு ஊரின் பெயரே முப்பது வெட்டி!

ஒரு காலத்தில் தொண்டைமண்டல மன்னனாக ஆட்சி புரிந்தவன் பெயர் வீர சம்புரவராயன் என்பது. ஒரு குறிப்பிட்ட, அவன் தேசத்தில் ஓடிக்கொண்டிருந்த நதியின் நீர் வருவதற்காக அவன் 30 வீரர்களை காவல் புரிய நியமித்திருந்தான். ஆனால் என்ன காரணமோ நதி நீர் வரவில்லை. இது பற்றி விசாரிக்காமலேயே மன்னன் ஆத்திரமுற்று அந்த 30 வீரர்களையும் வெட்டி வீழ்த்தி விட்டானாம்! இதனால் அந்த ஊர் முப்பது வெட்டி என அழைக்கப்பட்டு இப்பொழுது முப்பத்தட்டி ஆகிவிட்டது.

பின்னால் முப்பத்தட்டி எனும் முப்பந்தோட்டி பகுதிகளை ஆண்ட மன்னன் சோமநாதன் மீது பாடப்பெற்ற உலா சுவடி நூலில் அமைந்துள்ள நேரிசை வெண்பா பாடல் இது.

**குடந்தை நாராயணி**



# அமானுஷ்ய ஆற்றல்களை அளிக்கும்
# நித்யா தேவி யந்திரம்

திதிகளில் பூரண திதி என்று அழைக்கப்படும் தசமி திதியை ஆளக்கூடிய பெண் தெய்வம் நித்யா தேவி ஆவார். தசமி திதியில் பிறந்தவர்கள் வழிபடக்கூடிய தெய்வமும் நித்யா தேவி ஆவார். நித்யா தேவியானவள் நமது சூட்சும உடலை பூமியை போன்று பல்வேறு லோகங்களுக்கு எடுத்துசெல்லும் ஆற்றல், அடுத்தவர் வாழ்வை உணரும் சக்தி மற்றும் பரகாயபிரவேசம் போன்ற அமானுஸ்ய ஆற்றல்களை அளிக்கும் தெய்வமாக நித்ய தேவி திகழ்கிறாள். நமது உள்ளுணர்வு, ஆக்க அறிவு மற்றும் கற்பனாதிறனை மேம்படுத்த கூடிய சக்தியையும் நித்யா தேவி அருள்கிறாள். அலைபாயும் மனதை கட்டுப்படுத்தும் தன்மையையும் இந்த நித்ய தேவி ஊக்குவிக்கிறாள். இந்த நித்யா தேவி ஜனஸ்வரூபினி என்றும் சர்வத்மிக்கா என்றும் அழைக்கப்படுகிறாள். சர்வத்மிக்கா என்றால் அனைத்து பொருட்களின் ஆத்மா என்று பொருள். இத்தனை மாண்பு மிக்க இந்த நித்யா தேவி எந்திரத்தை பூஜை அறையில் கிழக்கு அல்லது வடக்கு நோக்கி வைத்து, சந்தன குங்கும திலகமிட்டு தினமும் செந்தாமரை மலர் கொண்டு பூஜித்து தீப தூப ஆராதனை காட்டி கீழே கொடுக்கப்பட்டிருக்கும் மந்திரத்தை 108 முறை கூறிவருவதால் அமானுஸ்யமான ஆற்றல்களையும் அதீத கற்பனா சக்தியையும் பெற்று இந்த பூமியில் சாதிக்க முடியும்.

நித்யா தேவியின் மந்திரம்:

“ஓம் ஐம் ரீம் ஸ்ரீம் ரிம் நித்யா தேவியே நமஹா”



திரு. செந்தில் நாதன்
ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர்

நித்யா தேவியின் யந்திரம்:





### சித்தர் பூமி

# பிச்சை சித்தர்

இறைவனின் நிழலே என்றிருப்போருக்கு வேறு எந்த இன்பத்திலும், நாட்டமே இருக்காது! ஆடம்பரமாக ஆடைகள் வேண்டாம்' அணிமணிகள் எதுவும் வேண்டாம்' அறுசுவை உணவு வேண்டாம்' பரவசக் குளியல் வேண்டாம்' பணமதும் வேண்டாம், வேண்டாம்!"

இத்தனை வேண்டாமைகளையும் தான் ஏற்று, திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளை- மும்மலம் அழிக்கும் முத்திக் கடவுளை அணுகி அவனது நிழலிலே இன்பம் காண்பதே இனிது என்கிற எண்ணம் யாருக்கு வரும்?...

அது மகான்களுக்கு மட்டுமே வாய்க்கும் மனம்! தன்னை மறந்து இறையை நினைத்து.. சிவனைத்தவிர, வேறொன்றும் இல்லை என்று பக்குவப்பட்ட ஞானிகள் மட்டுமே அவ்வாறு இருக்க முடியும்.

சித்தமெல்லாம் சிவ நினைப்பு கொண்டவர்களை நாம் சித்தர்கள் என்கிறோமே, அந்த சித்தர்களை எவ்வாறு அடையாளம் காண்பது!?

அவர்களுக்கென்று தனி அடையாளம் ஏதேனும் உண்டா?

உடலெங்கும் நீறுபூசி, கழுத்தை மறைக்கும் ருத்ராட்ச மாலைகள், காவி உடை என இருப்பார்களா?அவர்கள் ஒரு வகை இறையடியார்கள்

ஆனால்....

"பித்தா, பிறைசூடி.... பெருமானே அருளாளா"... என சுந்தரர் பாடினாரே....
அப்படி பித்தனைப் போல் சுற்றித்திரிந்து, பேச்சுக்கு வேலையே இல்லாமல், தன் கணபார்வை ஒன்றினாலேயே கதிமோட்சம் அருளும் ஞானவேலைப்பற்றி நாம் அறிந்திருப்போம் அல்லவா?

அவர்களில் ஒருவர்தான் திண்டுக்கல் நகரில் நான்கு சாலைகள் கூடுகின்ற பரபரப்பு நிறைந்த வெள்ளை விநாயகர் ஆலயத்திற்கு அருகே, பித்தனாய்- பிச்சைக்காரனாய் சுற்றித்திரிந்து தன் பாதம் பட்ட இடத்தையெல்லாம் பாவம்நீங்கச் செய்தவர்தான் பிச்சை சுவாமிகள்!

முகத்தை மறைத்தபடி நீண்டு வளர்ந்திருக்கும் ஜடாமுடி!மெலிந்த- கருமையான தேகம்! யாரோ கொடுத்த சட்டை: காவி வேட்டி! நீராடி நெடுங்காலம் ஆகிய உடல்!எங்கோ நிலைத்த பார்வை'நான்கு சாலைகளிலும் சுமார் நூறடி அடி தூரம் மட்டுமே

தானாய் நடக்கும் கால்கள்! இவர்தான் பொடிமட்டை சித்தர் என்கிற பிச்சை சுவாமிகள்!

திண்டுக்கல், வெள்ளை விநாயகர் ஆலயத்தை மையமாகக் கொண்ட நான்கு சாலைகள்' அதிலும் நூறடி அடி தூரம் தான் எல்லை' அதைத்தாண்டி வேறெங்கும் செல்ல மாட்டார்.

மூடிக்கிடக்கும் அப்பகுதியின் ஷட்டர்களுக்கு முன்னால் படுத்து கிடப்பார்! திடீரென எழுந்திருப்பார்' நடப்பார்' ஏதாவது ஒரு கடையின் முன்னால் போய் நிற்பார்! டீ கொடுத்தால் வாங்கி, கொஞ்சம் குடித்து விட்டு மீதியை ஊற்றிவிட்டு நடப்பார்! தண்ணீர் வேண்டுமா? தானே எடுத்து குடிப்பார்! அங்குள்ள எந்த கடையில் போய் நின்றாலும் இவரை பக்தியுடன் பார்த்து அமைதியாகி விடுவார்கள்.கேட்காமலேயே இவர் கேட்டது கிடைக்கும்! ஆனால், இவர்தான் தன் தேவைக்கு அதிகமாய் எதையும் எதிர்பார்க்க மாட்டார்!

காலை 6 மணிக்கு கடையை சிறக்கவரும் தொழிலதிபர்களும் கடைக்காரர்களும் இவரை, சில நொடிகள் நின்று வணங்கி விட்டுத்தான் தங்கள் கடையை திறப்பார்கள். தொழிலை தொடங்குவார்கள்.

இன்னும் பலர்... அதாவது பாமரமக்கள் இவர் தங்களை திட்ட மாட்டாரா? அடிக்க மாட்டாரா? என இவர் பின்னால் மணிக்கணக்கில் அலைவார்கள். இது என்ன விந்தை?!.. அடி வாங்க காத்திருப்பார்களா?...

ஆமாம் எதற்காகவும் யாரையும் தொடாத இவர், யாரையாவது தொட்டு அடித்தாலோ, சுடு சொற்கள் கொண்டு பேசினாலோ... அவர்களின் கர்ம வினைகள் தீர்ந்துவிடும் என்பது இங்குள்ள மக்கள் பலருடைய நம்பிக்கை! நம்பிக்கை மட்டுமல்ல' உண்மையும் கூட.!

இவர் அடித்ததால் குடும்பப் பிரச்சனைகள் தீர்ந்து குதூகலம் அடைந்து நிம்மதியாய் வாழ்கின்றன பல குடும்பங்கள்.

நான்கு மகள்களை எப்படி கரை சேர்க்கப் போகிறேன் என கலங்கி தவித்த ஆட்டோ ஓட்டுநர், நம் சித்தர் திட்டியதால், சொந்தமாக ஆட்டோ வாங்கும் நிலைமைக்கு உயர்ந்து, தன் பெண்களுக்கு தரமான கல்வியை கொடுத்தது தனிக்கதை!

சொத்து பிரச்சனையால் தன் குடும்பமே நிம்மதியில்லாமல் தவித்ததால், பாதிக்கப்பட்ட ஒரு நடுத்தர வயது பெண்மணி, வெள்ளை விநாயகரை வணங்க ஆலயம் வந்தார். தன் குறைகளை விநாயகப் பெருமானிடம் கொட்டிவிட்டு ஆலயத்திற்கு வெளியே வர, நம் பிச்சை சித்தர் அங்கே நின்றிருந்தார். சித்தரைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்த அந்தப் பெண்மணி, ஏதோ ஒரு ஆர்வத்தில் அவர் முன்னால் சென்று தலைகுனிந்து வணங்கி நின்றார்!

திடீரென தலையில் இடி இறங்கியது போல ஒரு வலி! தலையை பிடித்தபடி, நிமிர்ந்து பார்த்தார் அந்தப் பெண்மணி! எதிரில் நின்றிருந்தார் பிச்சை சித்தர்.

ஆம்! வணங்கி நின்ற பெண்மணியின் தலையில், தன் கையில் கிடைத்த செங்கல்லை எடுத்து அடித்து ரத்தம் சொட்ட செய்தவர் நமது பிச்சை சித்தர் தான்!

இது ஏதோ கடவுளின் அனுக்ரஹம் என நினைத்து அந்தப் பெண்மணி வணங்கிவிட்டு சென்றார்.

சில நாட்களிலேயே அந்தப் பெண்மணியின் குடும்ப பிரச்சனைகள் தீர்ந்தது, இந்த மகான் செங்கல்லைக் கொண்டு அடித்ததின் விளைவாக, அந்தப் பெண்மணி, தன் சிக்கல்களெல்லாம் தீர்ந்து சொந்த வீடு கட்டி சுகமுடன் வாழ்வதாக இங்குள்ள பலர் சொன்னார்கள்.

இவரை தினமும் வணங்கி வரவும் ஒருவர் இங்குள்ள கடையில் வேலை பார்த்து வந்தார்! அவர் நம் சித்தரிடம் அடிவாங்கி சிக்கல்கள் நீக்கப்பெற்றார்.

வேறு ஊரிலருந்த அவரது மைத்துனர் இங்கு வர,.. அவரிடம் நமது சுவாமிகளின் பெருமைகளைப் பற்றி சொல்ல, அவரும் சித்தரை வணங்கி விட்டு சென்றார்.

சில நாட்கள் கழித்து அந்த நபர் பௌர்ணமி கிரிவலத்திற்காக திருவண்ணாமலைக்கு செல்ல.. அங்கே கிரிவலப்பாதையில் நமது பிச்சை சுவாமிகள் இருப்பதை பார்த்து வணங்கிவிட்டு, திண்டுக்கல்லில் உள்ள தனது மைத்துனருக்கு போன் செய்து, பிச்சை சுவாமிகள்



திருவண்ணாமலையில் இருப்பதாகவும் தான் அவரை வழங்கியதாகவும் சொல்ல... அதேநேரம்... இவர் வேலை பார்க்கும் கடையின் முன்னால் வழக்கப்படி இரு கைகளையும் பின்னால் உயர்த்தி, தலையில் கை வைத்தபடி நின்று கொண்டிருந்தார் சித்தர்!

இறைவனின் அருளை முழுமையாகப் பெற்ற நமது பிச்சை சித்தர், அண்ணாமலையாரை பிரதட்சணம் செய்ய திருவண்ணா மலையிலும் உலவி, ஒரு மகான் ஒரே வடிவத்தில் ஒரே நேரத்தில் பல இடங்களில் காட்சி தர முடியும் என்பதை தன்னுடைய பக்தர்களுக்கு நிருபித்து காட்டியுள்ளார் பிச்சை சுவாமிகள்.

இப்படி... ஒரு பித்தனாய், பிச்சைக்காரன் போல் திரியும் இவருடைய அவதாரம் எங்கே நிகழ்ந்தது!? யார் இவர்?...

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணிக்கு அருகில் உள்ள களம்பூர்!
இந்த ஊரில் பிறந்தவர்தான் பாக்கியநாதன்! ராணுவப் பணியில் இணைந்து பணியாற்றினார். இவருடைய தந்தையாரும் ராணுவ வீரர் தான். ராணுவத்தில் சேர்ந்த பாக்கியநாதன் இளவயது முதலே கடவுள் பக்தி மிகுந்தவராக இருந்தார். ராணுவப் பணியில் இருக்கின்ற போதே, ஆண்டுக்கு ஒரு முறை விடுமுறையில் ஊருக்கு வந்தால், இரண்டு நாட்கள் சேர்ந்தாற் போல வீட்டில் இருக்கமாட்டார். கோவிலுக்கு போகிறேன் என்று எல்லா கோவிலுக்கும் போய் வருவார்' அவ்வளவு பக்தி!

ராணுவப் பணியில் இருந்ததால் நாட்டிலுள்ள பற்பல ஆலயங்களுக்கு சென்று இறையருள் பெற்று வந்தது தனிக்கதை!

திருமணமாகி ஐந்து பெண் குழந்தைகளை பெற்றவர் பாக்கியநாதன்!
ஐந்து பெற்றால் அரசனும் ஆண்டி என்பர்! ஆனால், ஐந்து பெண் பிள்ளைகளைப் பெற்ற இவர் அடுத்தவரிடம் யாசகம் பெறும் ஆண்டி யாகவில்லை. அடுத்தவர்களுக்கு தான் பெற்ற அருளை யாசகமாக கொடுக்கின்ற ஆண்டி ஆனார்! ஆம்!...

ராணுவ பணி முடித்து ஓய்வு பெற்றவர், பணியிலிருந்து தான் ஓய்வு பெற்றாரே தவிர, பக்தியை தொடர்ந்தார்.

ஒரு நாள்... யாரிடமும் சொல்லாமல் கிளம்பிப் போனார். வழக்கம்போல் கோவிலுக்குத்தான் சென்றிருப்பார்' வந்துவிடுவார் என குடும்பமே காத்திருக்க... போனவர் வரவே யில்லை.
எங்க போனார்? எங்கெங்கோ போனார்! இறுதியாக வந்து சேர்ந்த இடம்தான் திண்டுக்கல்! சுமார் நாற்பதாண்டு காலம்... திண்டுக்கல்லில் தானே ஒரு தெய்வமாக விளங்கி வந்தார்!

பித்தனைப் போல் இருக்கும் இவரை ஒரு மகான் என்று கடவுள் நிலைக்கு உயர்திய நிகழ்வு அது?..

இந்த திண்டுக்கல் நகருக்கு வந்து கடைகளின் முன்னால் நின்று நின்ற இவரை பிச்சைக்காரன் என்றும் பைத்தியம் என்று என்றும் ஏளனம் செய்தவர்களும் எட்டி உதைத்தவர்களும், பலவித இன்னல்களுக்கு ஆட்பட்டு துன்பம் அடைந்தார்கள். இதனை அறிந்த பலரும் நமது சித்தரை பரிகாசம் செய்வதை நிறுத்தினார்கள்.

கடையின் முன்னால் வந்து நின்ற சுவாமிகளுக்கு பலகாரம் ஒன்றை கொடுத்தார் கடைக்காரர். அன்று அவரது கடையில் அமோக விற்பனை! மறுநாளும் இவர் நமது கடைக்கு வருவாரா? என்று எதிர் பார்த்தார்!

இப்படியாகத்தான் நமது சுவாமிகளின் லீலைகள் தொடர்ந்தன. வணங்கியவர்கள் வாழ்வு பெற்றார்கள். அடி வாங்கியவர்கள் புனிதமடைந்தார்கள். ஏச்சு வாங்கியவர்கள் கர்ம வினை நீங்கப் பெற்றார்கள். மக்கள் அனைவராலும் மகானாய்... அல்ல அல்ல கடவுளாகவே வணங்கப்பட்டார்.

இந்நிலையில்தான் ஒரு தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் நமது சுவாமிகளைப் பற்றி படம்பிடித்து ஒளிபரப்பினார்கள். களம்பூரில் இருந்த குடும்பத்தினர், இதனைப் பார்த்து, இவர் நமது தந்தையை போல் இருக்கின்றாரே என சுவாமிகளின் மகளும் உறவினர்கள் சிலரும் இவரை தேடி வந்து பார்க்க, மனித நிலையிலிருந்து மகான் நிலைக்கு உயர்ந்துவிட்ட சுவாமிகளால் அவர்களை அடையாளம் காண முடியவில்லை. ஆயினும் ஊர், உலகமே அவரை கொண்டாடி, போற்றி வணங்குவதை பார்த்துச் சென்றனர்.

நேரம் கிடைக்கும் போதெல்லாம் அவர்கள் திண்டுக்கல் வந்து சுவாமிகளை பார்த்து செல்வது வழக்கம்!

ஒரு முறை...சுவாமிகளின் உடல்நலம் குன்றி யிருப்பதைக் கேள்விப்பட்டு இங்கு வந்த குடும்பத்தினர் ஊரார் மறுத்த நிலையிலும் இறுதி காலம் எங்களோடு முடியட்டும் எனக்கூறி, சுவாமிகளை களம்பூருக்கு அழைத்து சென்றனர்.

களம்பூர் சென்றபின் கடந்த ஆண்டு, அதாவது 2021 ஆண்டு மே மாதம் 28ம் தேதி ஜீவன் முக்தி அடைந்தார், நம் பிச்சை சுவாமிகள்!

அவ்வூரிலேயே சமாதி அமைக்க எண்ணினர்! ஆனால், திண்டுக்கல்லில் இருந்து சென்ற சுவாமிகளின் பக்தர்களும், அவரால் நல்வாழ்வு பெற்றவர்களும் "திண்டுக்கல்லின் அடையாளமாய் திகழ்ந்தவர் நமது சுவாமிகள்!
வெளியூர் மட்டுமின்றி வெளிநாடுகள் பலவற்றில் கூட சுவாமிகளின் பக்தர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மீண்டும் மீண்டும் வந்து வணங்கும் வகையில் அவர் நாற்பதாண்டு காலம் உலவிய திண்டுக்கல் மண்ணிலே சமாதி அமைக்கப்பட்ட வேண்டும்!என்று எடுத்துச் சொல்லி, திண்டுக்கல்லுக்கு அருகே கசவனம் பட்டிக்கு அருகே கூனம்பட்டியில் அவரது சமாதி சமாதியை அமைத்து வணங்கி வருகிறார்கள்.

கண்கண்ட தெய்வமாய் விளங்கிய நம் பிச்சை சுவாமிகள் இன்றும் நம்பி வருவோரை கைவிடுவதில்லை.



ரா. பன்னீர்செல்வம்



# பிள்ளைத் தமிழாக வந்த பெருமான்

“முருகனே செந்தில் முதல்வனே! மாயோன்

மருகனே! ஈசன் மகனே! ஒருகைமுகன்

தம்பியே! நின்னுடைய தண்டைக்கால்

எப்பொழுதும் நம்பியே கைதொழுவேன் நான்”

என்று மனம்,மொழி, மெய் ஒன்றுபட எல்லாம்வல்ல இறைவனாம் வேல்முருகனைப் பற்றி பணிந்து போற்றின

வணங்கி சிந்திப்போம்.

“உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்” என்பதுதான்

முருக பக்தர்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

யாமிருக்க பயமேன் என்பது முருகனின் அருளமுத வாக்கு!

“முதல் வணக்கம் எங்கள் முருகனுக்கு” என்று உள்ளம் உருக வழிபட்டு வாழ்பவர்கள் திருமுருக திருவருள் பெறுவர்.

முருகப்பெருமான் தமிழ்க்கடவுள்! அழகுமிகு கடவுள்தான் கந்தன்! அறிவுக் கடவுள் தான் ஞான தண்டபாணி!

தகப்பன் சுவாமியாக திகழ்கின்ற சுவாமிநாதன்!

கந்தன் கருணை அறிய கந்தபுராணத்தை படித்தாலே போதும். அருணகிரி சுவாமிகளை திருப்புகழைப் பாட வைத்தவர் திருமுருகன்.

முத்தை என்ற முதல் அடியை மகிழ்வுடன் எடுத்து தந்த ஞானமே வடிவமான முத்துக்குமரனை போற்றி வழிபடுவது நமது கடமை அல்லவா?!

எழுபத்திரண்டு சந்த குழிப்புகளில் அருணகிரி அசத்தியிருப்பார் தம் திருப்புகழில்!

பகழிக் கூத்தர் திருச்செந்தூர் பிள்ளைத் தமிழில் முருகப்பெருமானின் திருவருளை பரவுவார். ஆறுமுகனின் அருளையும், அழகையும்

எடுத்துரைத்துள்ளார்.

பல்வேறு காலங்களில் முருகப்பெருமானை போற்றி பல உயரிய நூல்கள் எழுந்தன.

முருகனின் அருள் நலத்தை பேசும் திருப்புகழை பாடிய அருணகிரியார் மதுரை மீனாட்சி அம்பிகை மலர்க்கரங்களில் கிளி வடிவில் அமர்ந்து உலகம்மை உள்ளம் மகிழ அத்தாயின் அருட் குழந்தை வேலனின் அற்புதங்களை பாடுகிற பேறு வேறு யாருக்கு கிடைக்கும்?

அருணகிரிநாதர் சுவாமிகளே பின்னாளில் திருஞானசம்பந்தராக அவதரித்திருக்கலாம் என்பது ஆன்றோர்தம் அருள் சிந்தனையாக உள்ளது.

“விழிக்குத் துணை திருமென் மலர்ப்பாதங்கள் மெய்மை குன்றா

மொழிக்குத்துணை முருகா எனும் நாமங்கள் முன்பு செய்த

பழிக்குத்துணை அவன் பன்னிரு தோளும் பயந்த தனி

வழிக்குத்துணை வடிவேலும் செங்கோடன் மயூரமே”

குன்றின் மீது ஏறி நின்றதாகவும், சிவபெருமானும் உமையும் எழுந்தருளி பழம் நீ ஆக இருக்கையில் வேறு பழம் உனக்கு எதற்கு என்று கூறியதால் அப்பதிக்கு பழனி என்றானது என்பது நாம் அறிந்த ஒன்று.

முருகா முருகா என்று உள்ளமுருக சொன்னாலே போதும். வந்த வினையும், வருகின்ற வல்வினையும் கந்தன் என்று சொல்ல கலங்கும்.

தொல்காப்பியர் முருகப்பெருமானை சேயோன் என்று குறிப்பிடுகின்றார். தமிழ்த் தென்றல் திரு. வி.கல்யான சுந்தரனார் முருகப்பெருமானை அழகு தெய்வமாக கண்டு தரிசித்து அக மகிழ்ந்தார்.

கண்ணாடியில் முருகப்பெருமானை தரிசித்தவர் இராமலிங்க அருள் வள்ளலார்.

கந்த கோட்டத்து கடவுளிடம் அளப்பரிய பக்தி கொண்டிருந்தார் திருவருட் பிரகாச வள்ளலார்.

முருகனை உருக உருக வழிபடுபவர்கள் வாழ்வில் உயர்ந்துகொண்டே செல்வதை காணலாம்.

யாமிருக்க பயமேன் எனப்பரிவுடன் பக்தர்களிடம் வினவும் வேலவனை வடிவேலவனை வணங்குவதையே வேலையாக கொண்டால் நல்ல வேளை நமக்கு சித்திக்கும். நம் வாழ்வு தித்திக்கும்.



சைவ சித்தாந்த செம்மல்

கவிஞர். சீனு. செந்தாமரை

கடலூர்

# வேங்கடவனும் பச்சை கற்பூரமும்



திருப்பதி பெருமாள் தாடையில் பச்சைக் கற்பூரம் வைப்பது ஏன்!! காரணம் அந்தக் கடப்பாரை பெருமாளை ஸ்பரிசித்த பெருமை கொண்டது. எப்படி..?

திருப்பதி திருமலையின் தண்ணீர்த் தேவையைத் தீர்த்துவைக்கும் குளமான “கோகர்ப்ப ஜலபாகம்“ என்னும் குளத்தைத் தோண்ட, பல நூறு ஆண்டுகளுக்கு முன் பயன்படுத்தப்பட்ட கடப்பாரைதான் அது என்பதும், அப்போதுதான் பெருமாளின் திருமேனியை ஸ்பரிசிக்கும் வாய்ப்பு அந்த கடப்பாரைக்கு ஏற்பட்டது என்றும் சொல்லும்போது நம்முடைய வியப்பு பன்மடங்கு கூடுகிறது.

திருமலையில் இன்றைக்கும் எங்கு பார்த்தாலும் மலர்கள் பூத்துக் குலுங்கும் இந்த நந்தவனத்தை முதலில் அமைத்த அனந்தாழ்வான்தான், அந்தக் குளத்தையும் ஏற்படுத்தியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஏழுமலை ஆண்டவனுக்கு “திருமாலை சேவை“ செய்யும்பேறு தனக்குக் கிடைத்த மகிழ்ச்சியோடு தனது மனைவியுடன் திருமலைக்கு வந்து சேர்ந்தார். திருமலையில் நந்தவனம் அமைத்தார்.

மண்வெட்டியால் வெட்டி நிலத்தைப் பண்படுத்தி பூச்செடிகளை நட்டார். அந்த நந்தவனத்துக்கு தமது குருநாதரின் திருப்பெயரே நிலைக்கும்படி “ராமாநுஜ நந்தவனம்“ என்று பெயரும் வைத்தார். (இப்போதும் அந்த நந்தவனம் அதே பெயரிலேயே அழைக்கப்படுகிறது.) கோடைக் காலத்தின் தண்ணீர்த் தேவைக்காக குளம் வெட்டி அதில் தண்ணீரைத் தேக்க முடிவுசெய்தார்.

இச்சமயம் அவரது மனைவி கர்ப்பம் தரித்திருந்தார். நந்தவனம் அருகே இருந்த பள்ளத்தில் ஒரு பகுதியை மேடாக்கினார். குளத்தின் ஒரு பக்கத்தை மட்டும் மண் இட்டு உயரமாக நிரப்பி, ஆழப்படுத்தினார். குளம் வெட்டும் பணியில் மனைவியும் சேர்ந்துகொண்டார். மண்ணை ஒரு புறமிருந்து மறுபக்கம் கொண்டு சென்று மனைவி கொட்டிவிட்டு வந்தார். ஒரு கர்ப்பிணிப் பெண் மண் சுமந்து செல்வதைப் பார்த்த ஒரு சிறுவன், அவருக்குத் தானும் உதவுவதாகக் கூறினான். ஆனால், அனந்தாழ்வானோ, “நம்மால் ஊரார் பிள்ளை எதற்கு சிரமப்பட வேண்டும் என்று நினைத்தவராக

மறுத்துவிட்டார்.

ஆனாலும், கர்ப்பிணிப் பெண் கஷ்டப்பட்டு மண் சுமப்பதைப் பார்த்து அந்தச் சிறுவன் தாயே, நான் மண் சுமந்தால்தானே அவர் கோபப்படுவார். அவருக்குத் தெரியாமல் உங்களுக்கு உதவுகிறேன். வளைவுக்கு இந்தப் பக்கம் நான் சுமக்கிறேன். அந்தப்பக்கம் நீங்கள் சுமந்து வாருங்கள் ““என்றான் சிறுவன். சிறுவனின் கெஞ்சல் மொழியைக் கேட்ட பிறகு அவளால் மறுக்க இயலவில்லை. கூடையை மாற்றிக் கொடுத்தாள்.

இப்படியே வேலை நடந்தது. திடீரென்று அனந்தாழ்வானுக்கு சந்தேகம் தோன்றியது. “மண்ணைக் கொட்டிவிட்டு சீக்கிரம் சீக்கிரமாக வந்து விடுகிறாயே“ என்று மனைவியைக் கேட்க, ““சீக்கிரமாகவே சென்று போட்டு விடுகிறேன் என்று பதில் சொல்லி சமாளித்தாள். சிறிது நேரம் சென்றதும், அனந்தாழ்வான் கரையைப் பார்க்க வந்தார்.

சிறுவன் கர்மசிரத்தையாக மண்ணைக் கொண்டு போய் கொட்டிக்கொண்டிருந்தான். இதனால், கோபம் தலைக்கேற கடப்பாரையால் சிறுவனின் கீழ்த்தாடையில் அடித்தார். சிறுவனின் தாடையில் இருந்து ரத்தம் கொட்டியது. கடப்பாரையால் அடிபட்டு ரத்தம் பெருகிய நிலையில், அந்தச் சிறுவன் ஓடிப்போய்விட்டான்.

மறுநாள் காலை திருமலை பெருமாளுக்கு அர்ச்சனைகள் செய்யவந்த அர்ச்சகர்கள் கதவைத் திறந்ததும் அலறினர். பெருமாளின் தாடையிலிருந்து ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. “அர்ச்சகரே பயப்படவேண்டாம்.

அனந்தாழ்வாரை அழைத்து வாருங்கள்“ என ஒரு அசரீரி கேட்டது. உடனே அவரை அழைத்து வந்தனர்.

பெருமாள் தாடையில் ரத்தம் வடிவதை அனந்தாழ்வான் கண்டார். ஆனால், அவருக்கு மட்டும், தான் மண்சுமந்த கோலத்தைக் காண்பித்தார் பெருமாள்.““சுவாமி, என்னை மன்னித்து விடுங்கள். தங்கள் தொண்டுக்கு அடுத்தவர் உதவியை நாடக்கூடாது என்ற சுயநலத்தில் சிறுவனை விரட்டினேன் என்னை மன்னித்தருள்க““ என்று விழுந்து வணங்கினார் அனந்தாழ்வான்.

பக்தர்களின் கஷ்டத்தைப் போக்கத்தான் நான் இங்கு இருக்கிறேன்.என் பக்தை கஷ்டப்படுவதைக் கண்டு வேடிக்கை பார்க்க என் மனம் எப்படி இடம் கொடுக்கும்““என்று அசரீரியாகக் கேட்டார்.

“சரி “ரத்தம் வழியாமல் இருக்க என்ன செய்வது?“ என்று அர்ச்சகர்கள் குழம்பினர்.“சுவாமியின் தாடையில் பச்சைக்கற்பூரத்தை வைத்து அழுத்துங்கள் ரத்தம் வழிவது நின்றுவிடும்“ என்றார். அனந்தாழ்வான் அர்ச்சகர்களும் மூலவரின் கீழ்தாடையில் பச்சைக் கற்பூரத்தை வைக்க, ரத்தம் வழிந்தது நின்று போனது. இதை நினைவுபடுத்தும்

விதமாகவே திருப்பதிப் பெருமாளின் தாடையில் பச்சைக் கற்பூரம் வைக்கும் நிகழ்ச்சி இன்றளவும் தொடர்கிறது.



திரு. கிருஷ்ணன்
ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர்

# மந்திர மகிமை

பெண்களை வசீகரம் செய்ய...

உலக உயிர்களெல்லாம் வியக்கும் அழகோடு, அருளை வாரி வாரி வழங்கக்கூடிய அன்னை அகிலாண்டேஸ்வரியின் அழகை வர்ணிக்க, ஆதிசங்கரர் அருளிச்செய்த “ஸௌந்தர்ய லஹரி“யின் 18வது பாடல்.... நினைத்த மாத்திரத்தில் பெண்களை வசீகரிக்கவும் கலைகளில் தேர்ச்சி பெறவும் தீயவற்றை கட்டுப்படுத்தவும் வாக்கு பலிதமாகும் அற்புத ஆற்றல்களைக் கொடுக்கின்ற மந்திர பாடலாகவே மாறியுள்ளது. இதனைப் பிரயோகிப்பதன் மூலம் அந்த அறிய ஆற்றலைப் பெறலாம்.



<u>மந்திரப் பாடல்:</u>

”தனுச்சாயாபிஸ்- தே தருண- தரணி ஶ்ரீ ஸரணிபிர்-

திவம் ஸர்வா -முர்வீ மருணிமணி மக்னாம் ஸமரதிய:

பவந்த்யஸ்ய த்ரஸ்யத்-வன- ஹரிண- சாலீன- நயனா:

ஸஹோர்வச்யா வச்யா: கதிகதி ந கீர்வாண-கணிகா:”

<u>இந்தப் பாடலின் பொருள்:</u>

உதயகால சூரியனைப் போன்று ஒளிப் பிரவாகத்துடன் கருணை பொங்கும் கண்களோடு வீற்றிருக்கும் அன்னையே! உலகம் முழுவதும் பார்க்கும் இடமெல்லாம் நீக்கமற,உன் நிறமான இளம்சிவப்பு நிறமாகவே இருப்பதாக எவன் ஒருவன் எண்ணி தியானம் செய்கிறானோ அவன் எந்தலோக தேவலோக மங்கையைக்கூட வசியம் செய்யும் சக்தியைப் பெறுவான் என்பது திண்ணம் தாயே!...

<u>மந்திரத்தை பிரயோகிக்கும் முறை:</u>

தங்கம் அல்லது வெள்ளித்தகட்டை எடுத்துக்கொள்ள வேண்டும். அதன்மீது சந்தனக்குழம்பினைத் தடவி, அதற்கு மேல் மஞ்சள், குங்குமத்தைப் பரப்ப வேண்டும். அதிலே இந்த மந்திரத்திற்கான யந்திரத்தை வரைந்து கொள்ள வேண்டும். அதன்பின் இத்தகட்டை வைத்து பூஜை செய்யவும்.

44 தினங்கள் தினமும் 1008 முறை வீதம் கிழக்கு- முகமாக அமர்ந்து மந்திரத்தை ஜபிக்க வேண்டும்.

சிவப்பு தாமரை மலர்களை கொண்டு லலிதா சகஸ்ரநாம அர்ச்சனை செய்யவும்.

பால் பாயாசம், நெய்சாதம், ஏலம், கிராம்பு, பால், பழங்கள் கர்ப்பூர வீடிகா என்னும் தாம்பூலம் ஆகியவற்றை வைத்து படையல் வைப்பது நல்லது!

இதனை மேற்கண்டவாறு சரியான முறையில் பூஜித்து, மந்திர பிரயோகம் செய்து வந்தால் தேவதையாகவே இருப்பினும்.. எந்த பெண்ணையும் வசியம் செய்யும் ஆற்றல், கலைகளில் தேர்ச்சி, அமானுஷ்ய சக்திகளை கட்டுப்படுத்தும் சக்தி ஆகியவை வாய்க்கப் பெறுவீர்கள்.

# குறளும் பொருளும்

தன்னைப் பார்க்க வேற்றூரிலிருந்து வந்திருந்த தன் நண்பனை

ஒரு இளைஞன் பஸ் நிலையத்திலிருந்து அழைத்துச் சென்றான். அந்த இளைஞன் தன் நண்பனை நடத்தியே அழைத்துப்போக இருவரும் மெல்ல பேசியபடியே நடந்தார்கள், அப்போது...

எண்பது வயதை நெருங்கிய ஒரு முதியவர் குடை பிடித்தவாறு இவர்களுக்கு முன்னால் நடந்து சென்று கொண்டிருந்தார். வயதானாலும் அந்த முதியவரின் கம்பீரத் தோற்றம் நண்பனை கவர்ந்தது!அவரையே பார்த்தபடி நண்பனுடன் பேசிக்கொண்டே வந்தான்.

எதிரில் சைக்கிளில் வந்த ஒரு பெரியவர், அந்த முதியவரைப் பார்த்து, சைக்கிளிலிருந்து தடுமாறி இறங்கி, ”அய்யா.. வணக்கம் அய்யா... நல்லா இருக்கீங்களா?” என கேட்க, முதியவர் புன்னகையுடன் தலையசைத்தார்.அதேபோல “பைக்கில்“ வந்த இளைஞனும் நிறுத்தி மிகுந்த மரியாதையோடு பேசிவிட்டு புறப்பட்டான். எதிரில் காரில் வந்த நாகரீகம் மிக்க பெண்மணி ஒருவள், காரை நிறுத்தி இறங்கி, முதியவரை வணங்கிவிட்டு சென்றார்.

இதையெல்லாம் கவனித்த வெளியூர் நண்பன் அந்த இளைஞனிடம், ”யார் இவர்? பலரும் மிகுந்த மரியாதை செலுத்த காரணம் என்ன?”.... என்று கேட்க, இளைஞன் சொன்னான், ”பக்கத்து கிராமத்து பள்ளிக்கூட வாத்தியார் இவரு, ரிட்டயர்டு ஆகி இருபது வருஷத்துக்கு மேல ஆகுது! நல்ல மனுஷன்! என்றதும்,

”ஓஹோ... அவர்கிட்ட படிச்சவங்களா அவங்கள்லாம்?” என கேட்டான், ”இப்ப நீ பார்த்த யாருமே அவர்கிட்ட படிச்சவங்க இல்ல’ முதல்ல சைக்கிள்ல வந்தவர் எங்க ஊர் தமிழ் வாத்தியார்! “பைக்“ல வந்த இளைஞன் யாருன்னா “ரெவின்யூ இன்ஸ்பெக்டர்!“ கார்ல வந்தவங்க காலேஜ் பிரின்சிபல்!” என்றான்.

சரி.. இவர்மேல என்ன அவ்வளவு மரியாத?” நண்பன் விடாமல் கேட்க...

”இவர் நல்லவர்ங்கறது ஒரு தனி மரியாத! இன்னொன்னு இந்த மாவட்ட கலெக்டர் இவரோட மூத்த மகன் தான். அவர் கலெக்டரானதுக்குப் பிறகு எல்லாமே நல்லபடியா நடக்குது! நேர்மையும் மக்கள் நலனுமே அவரோட குறிக்கோள்! இவரோட மகள் சாந்தினி தனபால் தான் இந்த தொகுதியோட எம். பி., நேர்மையான அரசியல்வாதி! சிறந்த அறிவாளி! மக்கள் சேவையில உயர்ந்து நிக்கறாங்க! கடைசி பையன் கல்லூரி மாணவன்! இளங்கலையில காலேஜ் ஃபர்ஸ்ட்! படிப்பு ஒன்றே குறிக்கோள்! சிறந்த மாணவன்னு கல்லூரியே பாராட்டுது!”

”சரிடா!.. அது அவங்கவங்க திறமை! இவர் என்ன செய்தாரு?...” நண்பன்.

”கல்வியறிவு, திறமை, நேர்மை, நல்ல சிந்தனைன்னு வளர்த்திருக்காரே இது போதாதா? அதனாலதான் இந்த வயசுலயும் இவ்வளவு கம்பீரம்! புரியுதா?” இளைஞன்!

"புரியுது புரியுது"... திருவள்ளுவர் சொன்னது உண்மைதான்!"

"என்ன சொன்னாரு?"...

"எழுபிறப்பும் தீயவை தீண்டா பழியிறங்காப்

பண்புடை மக்கள் பெறின்"-

பண்புடைய பிள்ளைகளை பெற்ற இவர தீமைகளும் தீண்டாது' தீயவர்களும் நெருங்க முடியாது" என்றான் நண்பன்.



**தமிழ் வசந்தன்**

## நாயன்மார் வரலாறு

### திருநீலநக்கர்

# கனவில் வந்த கடவுள்



ரா. பன்னீர்செல்வம்

பூமியில் அநீதி தலையெடுக்கும்போது நான் அவதாரம் எடுத்து அதனை அழிக்க வருவேன் என்றதும் கடவுள் தான். அதேபோல, நல்லோரின் நலன் காக்க, நன்மைகளை உலகறியச் செய்ய நான் இந்த பூமிக்கு வருவேன் என நிரூபித்ததும் கடவுள்தான். இப்படித்தான், பக்தியின் பெருமையை உலகுக்குணர்ந்த ஈசன் பூமிக்கு நேரில் வந்து ரிஷபாரூடராய் காட்சிதந்து தன் அடியார்களை பெருமைப்படுத்தி, அடையாளம் காட்டியுள்ளார்.

அப்படி அடையாளம் காட்டப்பட்டு இறையருள் பெற்றவர்கள் நாயன்மார்களாய் சன்னதி கொண்டு வணங்கப்பட்டு வருகின்றார்கள்.

அந்த வகையில் நாம் காணவிருக்கும் அடியவர் திருநீலநக்க நாயனார் ஆவார். மயிலாடுதுறைக்கு அருகில் உள்ளது சன்னாநல்லூர். இங்கிருந்து நாகூர் செல்லும் வழியில் உள்ள அழகிய சிறு நகர் “திருச்சாத்தமங்கை“.சிறப்பு மிகு இவ்வூரில் அவதரித்தவர் தான் திருநீலநக்கர்!

ஈசனின் கருணை ஒன்று இருந்தால் மட்டுமே போதும் எந்த இன்னலும் வராது. ஊழ்வினையும் உறுத்தாது என நம்பி, சதாசர்வ காலமும் அந்த சர்வேஸ்வரனயே நினைத்து, சிவ சிந்தனை ஒன்றே பெற்ற செல்வம் என எண்ணி வாழ்ந்து வந்தார்.

இவர் மனதில் என்றென்றும் வற்றாத கருணை சாதாரண மனிதனுக்கேயுரிய கோபம், இவரை சில சமயங்களில் மிருகமாக்கி விடுவதும் உண்டு.

அது எப்போது?

எவரேனும் சிவநிந்தனை செய்து விட்டால்... கரை காணா சினம் கரைமீறி விடும்! புருஷாமிருகம் போல மாறி மதியாதாரையும், சிவநிந்தனை செய்வோரையும் நட்பென்றும் உறவென்றும் பாராமல் ஒதுக்கி புறந்தள்ளி விடுவார்! இவரது கோபத்தை கட்டுப்படுத்த எவராலும் இயலாது. அந்த இறைவன் வந்தால் தான் உண்டு! இறைவன் வருவானா?

வந்தான்! ஆம்! திருநீலநக்கரின் சிவ பக்தியை மெச்சி; அவரின் கபடமில்லாத கருணை உள்ளத்தைக்கருதி வந்தார் ஈசன்! எப்படி? இதோ ஒரு சிறு நிகழ்வு! நிகழ்ந்தது என்னவோ ஒரு சாதாரண செயல்தான், ஆனால், நீலநக்கர் அதற்காக தந்த தண்டனை என்னவென்று தெரிந்தால் அவரது பக்தி உள்ளம் வெளிப்படும்.

காலையில் எழுந்ததும் நீராடி முடித்தபின், தானே தோட்டத்திற்கு சென்று அன்றலர்ந்த மலர்களை தன் கையால் கொய்து வந்து, தூய்மை மிகுந்த இடத்தில் வைத்து தனது கைகளாலேயே மாலை தொடுப்பார்!

அதற்குள்ளாக அவரது மனைவி குணவதி, பூஜைக்குரிய பொருட்களைக் கொண்டுவந்து வைத்து, தூப, தீப விளக்குகளையெல்லாம் மஞ்சள் பூசி, திலகமிட்டு தயாராய் வைத்திருப்பார்.

நீலநக்கர் மாலை புஷ்பங்களோடு வந்ததும் பூஜைகள் தொடங்கும் பூஜைக்கு வேண்டிய அத்தனை உதவிகளையும் இம்மி கூட பிசகாமல் செய்வாள் குணவதி.

இறைவனையே அசைக்கின்ற இனிமையோடு இசைக்கின்ற பதிகங்களை உரக்கப் பாடி திருநீலநக்கர் பூஜை செய்யும் நேரத்தில் அக்கம்பக்கம் வீட்டிலுள்ள அனைவருமே அந்த பக்தி வெள்ளத்தில் மூழ்கித் திளைப்பார்கள்.

இவ்வாறு நித்திய பூஜை முடிந்தவுடன் ஆலயத்து இறைவனுக்கென தொடுத்த மாலைகள், மலர்ச்சரங்களோடு தம்பதி சமேதரராய்.... இருவரும் இவ்வூரில் கோயில் கொண்டுள்ள அயவந்தி நாதரின் தரிசனம் காண செல்வார்கள். அங்கும் திருநீலநக்கர் பூஜைகள் செய்வார். இது வழக்கமாக நடந்து வந்தது!

ஆலயத்தில்.....
பூஜை செய்வதற்காக தீப கலசங்களை சுத்தமாக துடைத்து விளக்குகளில் எண்ணெய் ஊற்றிக்கொண்டிருந்தார் குணவதி. அவற்றை துடைப்பதற்கு கூட தூய்மையான துணிகளையே பயன்படுத்தினாள்.

எண்ணெய் ஒரு துளி கூட கீழே சிந்தாமல் விளக்குகளில் ஊற்றி பற்றவைத்தால் உடனே பற்றிக் கொள்ளும் வகையில் திரிகளின் நுனியில் கற்பூர துகள்களைப் பதித்து.... இப்படி ஒவ்வொன்றையும் பார்த்து பார்த்து, சற்று பயத்துடனேயே செய்தாள்.

அந்த பயத்திற்கு காரணம்... திருநீலநக்கர் தான். தன்னை எட்டி உதைத்த கால்களைக்கூட தொட்டுக் கும்பிடும் அளவுக்கு கருணையும் பொறுமையும் உள்ளவர்தான் திருநீலநக்கர்! ஆனால், பரமனின் பூஜையிலோ, வழிபாட்டு முறைகளிலோ, யாராவது, ஏதேனும் சிறு பிழை செய்தாலும் சீறி எழுவார்!
தான் எடுக்கும் முடிவு சரியானது தானா எனக்கூட அந்த சமயத்தில் நினைக்க மாட்டார்! தன் கண் முன்னே ஒரு சிறிய சிவநிந்தனை என்றாலும் அவர் மனம் என்ன நினைக்கிறதோ அதுதான் முடிவு! அதனை மாற்ற யாராலும் முடியாது! இது அந்த ஊரில் உள்ள அனைவருக்கும் தெரியும்! அவர் பரம பக்தன் என்பதனை எல்லோருமே அறிவார்கள்.

ஆனால்.. இன்று?....

மனைவியை அழைத்தார் திருநீலநக்கர்!
"குணவதி... அந்த மாலைகளை எடு" குணவதி எடுத்துக்கொடுக்க... சிவலிங்க திருமேனிக்கு சாத்தினார்.

திருநீற்றுப் பட்டை... அதன் மையத்திலே வட்டவடிவத்தில் சந்தனம், அதன்மீது குங்கும பொட்டு, அதன்மேலே சூரிய சந்திர சின்னங்கள்!

தான் செய்த அலங்காரத்தை தானே நன்கு உற்றுப் பார்த்தார். திருப்தியடைந்தார். தான் செய்த அலங்காரத்தில் இறைவனின் திருமேனி, திவ்ய தரிசனம் தருவதைக் கண்டு பேரானந்தம் கொண்டார்.

நெய் விளக்கை ஏற்றினார். திருமேனியின் இடது புறம் நின்று ஆரத்தி காட்ட தொடங்கினார். அப்போது அவர் எதிர்புறத்தில் ஒதுங்கி நின்றிருந்த குணவதியின் கண்களில் பட்டது அந்தக் காட்சி!

ஒரு சிலந்தி அந்த சிவலிங்க திருமேனியின் மீது ஊர்ந்து அப்படியே நின்றுது. பதறினார் குணவதி! ”இதை எப்படி அகற்றுவது” நாம் ஏதாவது சொன்னால் பூஜைக்கு தடை ஏற்பட்டுவிட்டது என்றால் சட்டென கோபப்படுவாரே.... என்ன செய்வது?”.. என யோசித்தாள்.
அப்போதுதான்
“பொன்னார் மேனியனே!
புலித்தோலை அரைக்கசைத்து,
மின்னார் செஞ்சடைமேல்
மிளிர்க் கொன்றை அணிந்தவனே...”
என்னும் பதிகத்தை மெய்மறந்து, உரக்கப் பாடி ஆரத்தி காட்டிக் கொண்டிருந்தார் திருநீலநக்கர்! இதுதான் சமயம்; சத்தமில்லாமல் சிலந்தியை விரட்டி விடுவோம் என்ற நினைப்பில். சிவலிங்கத்திருமேனி மீதிருந்த சிலந்தியை நோக்கி, லேசாக ஊதினாள், குணவதி. சிலந்தி அசையவே இல்லை. மீண்டும் மீண்டும் ஊதினாள். அசைவேனா என்று அப்படியே இருந்தது சிலந்தி.

“என்ன இது...கொஞ்சம் கூட நகர மாட்டேன் என்கிறதே“, என்ற ஆத்திரத்தில், சற்று வேகமாக ஊதினாள். நீலநக்கர் காட்டிக்கொண்டிருந்த நெய்தீபம் ஆடியது! அதே நேரத்தில் குணவதியின் உமிழ்நீர் சாரல் போல் தெறிக்க... அதில் சில துளிகள் இறைவனின் திருமேனி மீது படர்ந்திருப்பதைப் பார்த்த நீலநக்கரின் கண்கள் சிவந்தன, உடல் ஆடியது!

கோபம் கொப்பளித்தது..... சிவலிங்கத்தையும் குணவதியையும் மாறி மாறிப் பார்த்தார். அதைப் பார்க்கும் ஒவ்வொரு கணமும் கோபம் தலைக்கேறி அவரது கண்களை மறைத்தது! சிவனின் மீது இருந்த சிலந்தியை அவர் கண்டார் இல்லை. மனைவியின் உமிழ்நீர் மட்டுமே கண்ணில் பட்டு நெஞ்சம் எரிந்தது!

அந்தக் கோபக்கனல் நெருப்பு வார்த்தைகளாய் அவரிடமிருந்து வெளிப்பட்டது! இரைந்து கத்தினார் திருநீலநக்கர்!

“அபச்சாரம்... பெரும் அபச்சாரம்! சிவ குலத்திற்கே தீங்கு இழைத்து விட்டாய்! இது ஏதோ அறியாமல் செய்த தவறு என்று எண்ண முடியவில்லை உன் அலட்சியத்தால் செய்த பிழை! பெண்ணே! உன்னை என் மனையாள் என்று சொன்னாலே ஆண்டவன் என்னை மன்னிக்க மாட்டான்! அடக்கம் சிறிதுமின்றி இறைவனை களங்கப் படுத்திய உன்னை என் இதயத்திலிருந்து இந்தக் கணமே எடுத்தெறிந்து விட்டேன்!
இனி நீ யாரோ?...நான் யாரோ?... போ!...என்னை விட்டு அகன்று போய் விடு! சித்தத்தில் சிவனை வைத்த என்னை ரத்தத்தை பார்க்க வைத்து விடாதே! போ”... எனக் கூறியவரின் கோபத் தனலை எதிர்கொள்ள இயலாமல் பொங்கி வந்த துக்கத்தை அடக்கியபடி கண்ணீர் உகுத்தபடி அவ்விடத்திலிருந்து அகன்று சற்று தொலைவில் நின்றாள் குணவதி.

சிவலிங்கத்தின் மேலிருந்த அலங்காரங்களை கலைத்த நீலநக்கர் கண்ணீர் வழிய இறைவனுக்கு அபிஷேகம் செய்தார் “என்னை மன்னித்துவிடு இறைவா!” என ஈசனிடம் மன்றாடினார் தீங்கிழைத்தவளுக்கு தண்டனை கொடுத்து விட்டேன். அந்தத் தீங்கிற்குக் காரணம் அவளை நான் மனையாளாய் அடைந்தது! அதோடு நில்லாமல் புனிதம் நிறைந்த இந்த ஆலயத்தில் உனக்கு அருகே சேவை செய்ய அனுமதித்ததும் நான்தான்! இறைவா! நீ...எனக்கு கொடுக்க வேண்டிய தண்டனையை கொடு! என் உயிர் பறிப்பது தான் சரியென்றாலும் இந்தக் கணமே என் உயிரை தரவும் தயாராக இருக்கிறேன்! இறைவா! இனி உன் சித்தம்!”என அழுது புலம்பியவர்,ஓரமாய் ஒதுங்கி நின்ற மனைவியை கோபமாய் முறைத்துப் பார்த்துவிட்டு வேகமாக கோவிலை விட்டு வெளியேறினார்.

“எதையோ செய்யப்போய் அது சிவ நிந்தனை ஆகிவிட்டதே!.... இறைவா என் கனவிலும் எண்ணிப் பார்த்திராத தண்டனையை என்னவர் எனக்கு அளித்து விட்டு விலகிப் போய்விட்டார்! இனி நீயே கதி நான் செய்தது பிழையென்றால் இனி காலம் முழுவதும் இக்கோவிலிலேயே உனக்கு சேவை செய்கிறேன்.” என குணவதி இறைவனை வேண்டி அழுதாள்.

இரவு வந்தது!.... ஆலயத்தில் நடை சாத்தப்பட்டது! வெளியில் ஒரு ஓரமாய் தலையை கைக்கு கொடுத்தபடி, கணவனின் நினைவிலேயே கண் மூடி படுத்திருந்தாள் குணவதி!

அதே நேரத்தில்...தன் வீட்டில் நிம்மதியாய் உறங்கிக் கொண்டிருந்தார் நீலநக்கர்! அவரது

நிம்மதிக்கு காரணம் வேறு ஒன்றுமல்ல! இத்தனை ஆண்டுகளாய் சுற்றத்தார் முன்னிலையில் கரம் பிடித்து மனமொத்து வாழ்ந்துவந்த மனையாளை சிவநிந்தனை செய்த குற்றத்திற்காக தண்டனை கொடுத்து தள்ளி வைத்ததால் ஏற்பட்ட நிம்மதியோடு தான் உறங்குகிறார்.

தனக்கு வாழ்க்கை துணை முக்கியமல்ல; வாழ வைப்பவன் துணைதான் வேண்டும் எனத் துணிந்து முடிவெடுத்ததால் தான் இப்படி ஒரு நிம்மதி தூக்கம்!

கோவிலிலே குப்பையாய் ஓர் ஓரத்தில் குணவதி! குதூகலமான மனதோடு மெத்தையிலே நீலநக்கர்.

இதெல்லாம் இறைவனின் திருவிளையாடல் தானே!?... இது மட்டுமா? இது இன்னும் நீடிக்கலாமா? தனக்காக தன் வாழ்க்கை துணையை உதறித் தள்ளிய பக்தனை அப்படியே விட்டுவிடுவானா இறைவன்?!...
நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்த நீலநக்கரின் கனவிலே, கையில் சூலம் தாங்கி, ரிஷப வாகனத்தில் ஆரோகணித்த நிலையிலே காட்சி கொடுத்து," நீல நக்கனே! நீ என் மீது கொண்ட பக்தியை நான் அறிவேன்! இப்போது நீ அறியவேண்டியது ஒன்று உள்ளது! என் மேனியில் உன் மனைவி ஊதிய இடம் உனக்குத் தெரியுமல்லவா? அந்த இடத்தையும் என் மேனியின் மற்ற இடங்களையும் நன்றாக உற்றுப்பார்! உண்மை விளங்கும்; உன் மனதை மூடியிருக்கும் மாயத்திரை விலகும்! விடிந்ததும் கோயிலுக்கு வா!".. எனக்கூறி மறைந்தார் ஈசன்!

கனவு கலைந்து துள்ளி எழுந்தார் நீலநக்கர்!
"என்ன விந்தை இது !?...இறைவன் எனக்கு எதை உணர்த்துகிறார்? எதற்கு என்னை ஆலயத்திற்கு வரச்சொன்னார்?" ஏதும் புரியாமல் தூங்காமல் விழித்திருந்தார்.

விடிந்ததும் முதல் வேலையாக நீராடி முடித்து ஆலயத்திற்கு வந்தவர், அக்கம்பக்கம் சுற்றி இருந்தோர் என எதையும் நினைவில் கொள்ளாமல் நேராக கருவறைக்குள் ஓடினார்.

விளக்கை ஏற்றி, பயபக்தியோடு கையிலெடுத்து இறைவனின் திருமேனியை பார்த்தார் குணவதியின் உமிழ்நீர் பட்ட இடம் தவிர மற்ற இடமெல்லாம் சிலந்தி கொப்பளம் காணப்பட, பதறித் துடித்தார்.

"இறைவா! நான் தவறிழைத்து விட்டேன்... என் மனைவி என்ற ஆணவத்தில் அலட்சியமாக செயல்பட்டு விட்டாள் என எண்ணி, தவறான தண்டனை கொடுத்து விட்டேன்! என்னுடைய பிழைக்கு,... தங்கள் மேனியில் கொப்பளங்களா? சோதனை வேண்டாம் சுவாமி! உணர்ந்தேன்! என் தவறை மன்னியுங்கள்!" என சிவலிங்கத்தை கட்டியணைத்து கண்ணீர் வடித்தார்! கதறினார்!

என்ன ஆச்சரியம்??...கொப்புளங்கள் ஒரு நொடியில் காணாமல் போயின! அகமகிழ்ந்தார் நீலநக்கர்! அன்பு கனிய உருகினார்! பாடினார்,இறைவனின் திரு முன்பு ஆனந்தக் களிப்பில் ஆடினார்!

குணவதி ஓடிவந்து அவர் காலில் விழ, அவளைத் தடுத்து நிறுத்தி," நீ செய்தது தவறே இல்லை என இறைவன் கனவில் வந்து உணர்த்திவிட்டார்!" என நா தழுதழுக்க கூறி, இறைவனை வணங்கி, தன் மனைவியுடன் இல்லம் திரும்பினார்.

பழையபடியே, இறை நினைவில், சிவ சிந்தனையில் தினந்தோறும் சிவ பூஜைகள் செய்து, சிவனடியார்களை ஆராதித்து சிறப்புடன் வாழ்ந்த திருநீலநக்கரை இறைவன் ஆட்கொண்டு திருநீலநக்கர் என்ற திருநாமத்தோடு நாயன்மார்களில் ஒருவராக்கி, உயர்வினை தந்தார்.



# கடன் பிரச்சனைகளில் விடுபடவும், கடனை திருப்பி செலுத்தவும் உகந்த நாட்கள்

கடனை வாங்குவதற்கும், வாங்கிய கடனை திருப்பி செலுத்துவதற்கும் ஏற்ற நாள், நட்சத்திரம், திதி மற்றும் நேரம் வேதத்திலும் ஜோதிடத்திலும் சொல்லப்பட்டுள்ளது. சிலர் கடன் வாங்கக்கூடாத நாள் மற்றும் நட்சத்திரத்தில் கடனை வாங்கி கடன் பிரச்சனையால் அவதி படுபவர்களும் உண்டு. கடன் சுமையிலிருந்து விடுபடவும் திருப்பி செலுத்தவும் உகந்த நாட்களை கீழே காணலாம்.

1. அன்னை பார்வதி தேவியும் சந்திரனும் திங்கள் கிழமையை ஆள்பவர்கள் என்பதால் கடனை வாங்குவதற்கும் கடனை திருப்பி செலுத்துவதற்கும் திங்கள்கிழமை உகந்த நாள் ஆகும்.

2. கடனை திரும்ப செலுத்துவதற்கு செவ்வாய்கிழமை சிறந்த நாள் ஆகும். அதே நேரத்தில் புதிய கடனை வாங்குவதற்கு செவ்வாய்கிழமையை தவிர்க்க வேண்டும்.

3. புதன்கிழமையை ஆளும் கிரகம் புதன் ஆவார். கடன் வாங்குவதற்கும் கடன் கொடுப்பதற்கும் புதன்கிழமையை தேர்ந்து எடுக்கக்கூடாது.

4. வியாழக்கிழமையை ஆளும் கிரகம் குரு பகவான் ஆவார். குரு தனத்தை குறிக்கும் கிரகம் என்பதால் தனம் உள்ளே வரலாம் அதாவது கடன் வாங்கி தனம் குடும்பத்திற்குள் வரலாம் ஆனால் கடனை திருப்பி அடைப்பதனால் தனம் வெளியே போகக்கூடாது அதாவது கடனை அடைக்க கூடாது.

5. சுக்கிரன் வெள்ளிக்கிழமையை ஆளும் கோள் என்பதால் கடன் வாங்குவதற்கும் வாங்கிய கடனை அடைப்பதற்கும் உகந்த நாள் ஆகும்.


6. சனிக்கிழமை சனி பகவானால் ஆளப்படுவதாலும் சனி மந்தன் என்பதால் கடன் அடைபடுவதை மந்தப்படுத்துவார் என்பதாலும் சனிகிழமைகளில் கடன் கொடுக்கவோ கடன் வாங்கவோ கூடாது.

7. ஞாயிற்றுகிழமையை ஆளும் கிரகம் சூரியன் என்பதாலும், சூரியன் ஒரு வெப்பத்தையும் ஒளியையும் உமிழும் கோள் என்பதாலும், பணம் சம்மந்தப்பட்ட எந்த ஒரு கொடுக்கல் வாங்கல்களும் வைத்துக்கொள்ள கூடாது.




திரு. செந்தில் நாதன்

ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர்



# கருணை மனம்

என கந்தன் கேட்பதற்குள், வந்தவன் முந்திக்கொண்டு ”தம்பி! நீ ரொம்ப உதவும் குணம் கொண்டவன் என தெரியுது. நான் இந்த விளக்கிலே எண்ணை தீர்ந்து போய் அணையும் நிலையிலே இருக்கு ஆத்தூருக்கு போறேன் என் வீடு அதுதான், வழியே பாம்பு,தேளுன்னு நிறைய போவும்!கொஞ்சம் எண்ணெய் குடேன். ரெண்டு நாள் கழிச்சு, நானே வந்து இந்த கடனை

தீத்துவிடுவேன்” என இறைஞ்சினான். கந்தன் கொண்ட கருணை குணம் அவன்பால் இரங்க, வழிப்போக்கன் போதுமான எண்ணெய் விளக்கில் போட்டு கொண்டு, “நன்றி“ என்று கூறி, கிளம்பி போனான் ஆத்தூருக்கு.

சோதனை போல,மூன்றாவது நாளும் கந்தன் வேறு ஒரு இக்கட்டுக்கு ஆளானான். கருணை காட்டுவது ஒரு தொடர்கதையும் ஆகிவிட்டது, காரணம் ஒரு கிழவி,, கலங்கரை விளக்கத்தின் கீழ்ப்புற வெளியில் நின்று கொண்டிருந்த கந்தனிடம்,” ராஜா,! உன் பெயர் கந்தன் தானே ரெண்டு நாள் முன்னாடி என் பக்கத்து குடிசையில இருக்கிற மாமன் உங்க கிட்டதான் எண்ணெயை கடனாக வாங்கிட்டு போனானாமே.!….ரொம்ப சந்தோஷம். என் வீட்டிலேயே இன்னிக்கி எண்ணெய் தீந்து போச்சு, அடுப்பை மூட்ட கூட அது இல்ல. அங்கே பேரப்பிள்ளை பசியோட காத்துக்கிட்டு இருக்கு. அதற்கு பால் காய்ச்சி தர்ரணும். தயவு செஞ்சு எண்ணையை பாட்டிலில் ஊத்தி தாயேன். உனக்கு புண்ணியமா போகும்”. என அழுதபடி சொன்னாள்.

கந்தன் கொண்ட கருணை மனம், வெண்ணையாய் உருகி, பாட்டிலில் எண்ணெயாக போய்விட்டது. வந்தவள் “மகாராசனா இரு“! என வாழ்த்தி விட்டு நகர்ந்தாள். ஒரே ஊரில் மூன்று எண்ணை கடனாளிகள்!

மறுநாள் காலை, கந்தனை சந்திக்க கப்பல் நிர்வாக ஊழியன் ஒருவன்

“தம்பி! இன்னிக்கு உனக்கு எண்ணெய் கொடுக்க வரதாயிருந்த கப்பல்; வர ரெண்டுநாளாகுமாம். அதனால, சிக்கனமாக இருந்து விளக்கேத்தி இந்த நிலையை சமாளித்துக் கொள்”! என எச்சரிக்கை தந்து விட்டு போனான்.

இவ்வேலையில் முன் அனுபவமில்லாத கந்தன், அப்போது பரிசோதிக்க எண்ணெய் பீப்பாய் அருகே சென்று அதன் மூடியைத்திறந்தும் அதிர்ச்சியுற்றான். ஏனெனில் அதிலிருந்த எண்ணெய், அன்றைய தினம் விளக்கேற்றும் அளவிற்கு தான் இருந்தது! பயந்து போனவன் தன்னிடம் எண்ணய் கடனாகப் பெற்றவர்களை

நோக்கி விரைந்தான்.

முதலில் எண்ணெய் கடன் பெற்றவர், பக்கத்து ஊர் திருவிழாவுக்கு போய்விட்டாராம்! என்று வருவாரோ என்று தெரியாத நிலை.

கை விளக்கிற்கு எண்ணை பெற்றவனோ," திடீர்னு வந்து கேட்டா, எப்படி தர்றது... இப்ப இல்லை" என கையை விரித்து விட, அடுத்து எண்ணைய்காக கெஞ்சிய கிழவியை கந்தன் சந்தித்தான். அவளோ, "எண்ணெய் வாங்க, என்கிட்ட காசு இல்லேப்பா" அடுத்த வாரம் என் பேரப் பிள்ளை சம்பளம் கொண்டு வருவான்,அப்போ நானே உன் ஆபீசுக்கு வந்து கடனை தீக்கறேன்! ஏன்னா, எண்ணெய் கடன் ஆகாதில்ல"...! என்று ஒரு சம்பிரதாய நீதியை அவன் மீது தெளித்தாள்.

ஏமாற்றத்துடன் கலங்கரைவிளக்கு அறைக்கு வந்த கந்தன் கையில் ஸ்டாக் வைத்திருந்த கொஞ்ச எண்ணெயை வைத்து அன்று விளக்கை ஏற்றி சமாளித்துவிட்டான்.

மறுநாள், ஒரு சொட்டு கூட எண்ணெய் இல்லாத நிலையில் அரண்டு-போனான் கந்தன். அன்று கலங்கரை விளக்கம், அதனால் ஏற்றப்படவில்லை. அமாவாசை இருட்டு வேறு, எல்லாம் ஒன்று சேர, அன்று இரவு கடலில் வந்த பிரயாணி கப்பலானது, திக்கு திசையறியாது, கடலில் இருந்த ஒரு பெரிய பாறை யொன்றில், மோதி உடைந்து, பத்து பயணிகள் இறந்து போய்விட்டனர்.

அதன் விளைவாக நடத்தப்பட்ட கப்பல் கம்பெனி விசாரணையின் தீர்ப்பாக கந்தனின் வேலை போனது. மாத சம்பளமாக வரவிருந்த வேலைக்கு இது "ஆப்பு"ஆகிவிட்டது!

ஆற்றில் போட்டாலும் அளந்து போட வேண்டும்.( தனக்கு தேவையானதை வைத்துக்கொண்டு) என்ற பழமொழி கருணை உள்ளத்திற்கு ஒரு "செக்" வைத்துவிடுகிறது!

இருந்தாலும் கருணை மனம் கொண்ட கந்தனின் வேலை பறி போன செய்தி, துபாயில் எண்ணெய் கம்பெனி ஒன்றில் நிர்வாகியாக பணிபுரிந்து கொண்டிருந்த அவனுடைய சிற்றப்பாவிற்கு எட்டிவிட அவர் விரைந்து, செயல்பட்டு கந்தனுக்கு பாஸ்போர்ட், விசா வசதிகளுடன் விமான டிக்கெட்டும் ஏற்பாடு செய்து துபாய்க்கு வரவழைத்து விட்டது மட்டுமல்லாமல் மாதம் 50 ஆயிரம் ரூபாய் சம்பளம் கந்தனுக்கு கிடைக்கும் வகை வேலைக்கு ஏற்பாடு செய்துவிட்டார். இதில் அவருடைய கருணை மனமும் பளிச்சிடுகிறதே! தவிர கருணை உள்ளம் நிறைய நல்லதும் செய்யும் என்று உணரலாம்.

கடவுளின் கருணை குணம் குறித்து சாஸ்திரங்கள் உரைப்பது என்ன தெரியுமா? இறைவன் ஒரு தந்தையைப் போல முன்னால் ஓடோடி வந்து உதவி புரிவான!

ஒரு தாயைபப்போன்று அதீத பாசங்காட்டி ஆனந்தத்தில் ஆழ்த்துபவன்!

நல்ல உறவினன் அல்லது பந்து என்றால் அது எம்பெருமான் தான்!

ஆண்டவன் நம்முடைய ஆத்ம பந்துவாக விளங்க, இதர பந்துகளோ ஆபாச பந்துகள் அல்லது கருமா தீனமான பந்துகளே என்று மகான் பெரியாழ்வார் பகவானின் காருண்யகடாட்சத்தை போற்றி விட்டு, மனித உடலை பெரிய நகரமென வர்ணிப்பார் தனது நூலொன்றில்.

இவ்வீட்டிற்கு இறைவன் அமைத்துள்ளது ஒன்பது வாசல்களாம்!

இத்தகைய இல்லத்தை பெருமாள் கட்டிக் கொடுத்து விட்டு, அவர் க்ஷேத்ரஞ்சன் எனும் ஆத்மாவை அங்கே குடி வைத்துவிடுகிறார். அந்த ஆத்மா அவ்வீட்டில் முதலில் கண்ணோட்டம் விட்டு

விட்டு "ஓஹோ" இது நிரந்தரமான ஒன்றுதான் என முடிவு செய்து விடுகிறது. எனவே அந்த உடலை பாதுகாக்கும் உறுதி பூண்டுவிடுகிறது. அதனால் அதற்காக கடும் உழைப்பை ஆத்மா மேற்கொண்டு செயல்படுகிறது.

நாட்கள் பறந்தோட, வயது ஏற, ஏற உடல் கொஞ்சம் கொஞ்சமாய் தளர்ச்சி பெற ஆரம்பித்து விடுகிறது. அடுத்த கட்டத்தில் மனிதனின் தேக உறுப்புகள் ஒவ்வொன்றும் தேய்மான நிலைக்கு போய்க்கொண்டிருக்கின்றன.

இதுவரை அம்மனிதன் தெய்வ சங்கல்பத்தால் பலசாலியாக திகழ்ந்தவன், தளர்வு நிலைக்கு வந்தவுடன் அவனுடைய ஆத்மா "ஐயோ, கடவுளே ஏன் இந்த சோதனை என்னைக் காத்தருள்"! என இஷ்ட தெய்வத்திடம் வேண்டுகோள் விடுத்து சரண் புகுகிறான்.

இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டு பகவான்

"இப்போதான் என் நினைவு உனக்கு வந்ததோ" என குத்தி காட்டாமலே கருணை சமுத்திர மான அவர் "பரவாயில்லை, இப்போதாவது என்னை நினைத்து கொண்டாயே"! என அவன் பால் இறங்கி கருணைகொண்டு அந்த ஆத்மாவை அன்புடன் ஏற்றுக் கொள்வார்.

ஸ்ரீ ஆண்டாள் போற்றிப் பாடும் தனது திருப்பாவை பாசுரம் ஒன்றில்"கனைத்திளங்கற்றெருமை கன்றுக் கிரங்கி நினைத்து முலை வழியே நின்று பால் சோர நனைத் தில்லம் சேறாக்கும் நற்செல்வன் பெருமாள்" என்று போற்றி குதுகலம் பெறுகிறாள்.

இந்து மதம் செழிக்க காரணமான ஸ்ரீ சங்கர பகவத் பாதாள் அவர்கள் தான் அருளியுள்ள ஸ்லோகமொன்றில், கயிலை பெருமானை"தயாகரஸ்ய" என குறிப்பிட்டு மகிழ்வார். அதன் பொருள் இறைவன் மிகுந்த கருணைசாலி என்பது.. மேலும் அந்த சுலோகத்தில் இப்படி தொடர்ந்து உரைப்பார், அவர்.

சிவபிரான் மிகுந்த கருணைசாலி என ஏன் கூறுகிறேன் என்றால், அவர் நமக்கு பரம அந்தரங்கமானவர். அவருக்கு அப்பாற்பட்ட மனிதர்கள் எவராக விருந்தாலும், அவர்கள் தற்காலிக மாகத்தான்; அந்தரங்கமாக செயல்படுவார்கள், அவர்கள் நாளைக்கே கூட நமக்கு வேண்டாதவர்களாக ஆகிவிடும் அபாயமமுண்டு. அதுமட்டுமின்றி அவர்கள் எதிர்பார்ப்பது நம்மிடமிருந்து கிடைக்காமல் போய்விட்டால் அவ்வளவுதான்! நம்மை ஏதேனும் ஒரு பிரச்சனையிலும் மாட்டி விடகூட அத்தகையோர் தயங்கமாட்டார்கள். ஆனால் இறைபக்தன் என்றுமே உலகமய அன்புகொண்ட பரந்தாமனின் கருணை தனக்கு கிட்டவில்லையே என்ற நிலைக்கு நிச்சயம் தள்ளப்பட மாட்டான்! இதனை மகான் சங்கர பகவத் பாதாள்

"நமே பக்த:ப்ரணச்யதி" என்று குறிப்பிட்டு அருள்வார்!

உலகாளும் இறைவன் மனங்கசிந்து விட்டால், அவரது இயல்பான கருணை கடாட்சம் எல்லையற்றது, அந்தஸ்து

பேதமின்றி ஏழை, பணக்காரன்,அறிவாளி ,முட்டாள் அனைவருக்கும் கிட்டிவிடும் என்பதை இந்த உண்மை கதை எடுத்தோம்பும்.



**ஆரூர். ஆர். சுப்பிரமணியன்**

# பரிகார ஸ்தலங்கள்



திருமணத் தடை நீங்க செல்ல வேண்டிய ஸ்தலம்

ஸ்ரீ நித்யகல்யாணப் பெருமாள் கோவில் சென்னை. அங்கு மாலை அணிந்து கோவிலின் முறைப்படி பரிகாரம் செய்தால் திருமணதடை நீங்கி திருமணம் நடைபெறும்.



புத்திர பாக்கியம் கிடைக்க சஷ்டி விரதம் இருந்து திருச்செந்தூர் முருகப்

பெருமானை தரிசித்தால் தடை நீங்கி புத்திர பாக்கியம் கிடைக்கும்.



கல்வியில் மேன்மை பெற திருவோணம் நட்சத்திர நாளில் செட்டிபுண்ணியம் செங்கல்பட்டில் உள்ள யோக ஹயக்ரீவரை தரிசனம் செய்தால் கல்வியில் உயர்ந்த நிலைக்கு செல்ல முடியும்.




அரசு வேலை கிடைக்க மற்றும் அரசு வேலையில் உள்ள சிக்கல்கள் தீர

பௌர்ணமி நாளில் திருவண்ணாமலை கிரிவலம் செல்வது மிகவும் சிறப்பு.

# பரிகார ஸ்தலங்கள்


உடல் உபாதைகள் நீங்க தங்கள் ஜென்ம நட்சத்திர நாளில் வைத்திய வீர ராகவ பெருமாளை தரிசித்து உப்பு மிளகு கோவிலில் செலுத்தினால், உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்படும். ஸ்தலம் உள்ள இடம் திருவள்ளூர்.





மன நல பாதிப்பு உள்ளவர்கள் பௌர்ணமி நாளில் ஓசூரில் உள்ள சந்திர சூடேஸ்வரரை தரிசித்து வந்தால் முன்னேற்றம் காணப்படும்.

கடன் தீர கும்பகோணம் அருகே திருச்சேறை என்ற ஊரில் உள்ள சாரபரமேஸ்வரரை தரிசனம் செய்து கோவில் உப்பு செலுத்தினால் கடன் தீரும்.






வெளிநாடு செல்ல தங்கள் ஜென்ம நட்சத்திர நாளில், சரபேஸ்வரரை தரிசனம் செய்து தொடர்ந்து வழிபட்டு வந்தால், தடைகள் நீங்கி வெளிநாடு செல்ல முடியும்.

# பரிகார ஸ்தலங்கள்

பெரிய கண்டங்கள், பாதிப்புகள் நீங்க சிவபெருமானுக்கு தொடர்ந்து விபூதி அபிஷேகம் செய்து வந்தால் கண்டங்கள் தீரும்.



அனைத்து பரிகாரங்களும் ஜோதிடரை அனுகி தங்களுக்கு உகந்த நேரத்தில் செய்வதே சக்தி வாய்ந்ததாகும் மற்றும் உடனே பலன் தரக்கூடியதாகும்.

# அழிந்தது எதனால்?

**காஞ்சிக்குமரன்**

புராணங்கள் மனிதர்களுக்கு கற்றுத்தரும் அரிய வழிகாட்டிகள்!

சில புராண காலத்தினர் வெவ்வேறு வழிகளில் அழிந்துபோகும் துர்பாக்கிய நிலை முன்பு ஏற்பட்டிருக்கிறது; அவர்களில் சிலர் இவர்கள்.

### அயோத்தி அரசர் தசரதர்

தனது மனைவி கைகேயி மீதும், தன் பிள்ளைகள் மீதும் அதீத பாசங்கொண்டிருந்ததாலும் குறிப்பாக கைகேயி மீது கொண்டிருந்த அதீக மோகமும் தசரதரின் அழிவிற்கு காரணமாயிற்று.

### கௌரவ துரியோதனன்

தான் கொண்டிருந்த அளப்பெரிய பேராசையின் உந்துதலால் தனது சகோதரர்களையே ஏமாற்றி அவர்களுடைய ராஜ்ஜியம், சொத்து இவற்றை அனுபவிக்க முயன்ற லோபகுணம் அவன் நாசமாகும் நிலைமையை தந்துவிட்டது.

### புரோ சக்கரவர்த்தி

தன்னைவிட பிறர் அறச்செயல்கள் அதிகம் செய்தால் புரோ சக்கரவர்த்திக்கு அறவே ஆகாது. ட்ம்பம், வீண் பெருமைக்கு ஆளான அவன் தன்னிலை மறந்து தர்மம் செய்ததால் அழிந்து போய் விட்டான்.

### சிசுபாலன்

மார்ச்சரிய குணம் கொண்டவன் சிசுபாலன் தனக்கு நிகராக சமநிலை பெற்ற எவரையும் அவனுக்கு பிடிக்காது. அத்தகைய சுகானுபவங்களை அனுபவித்தவர்களை வெறுத்து எதிர்க்க, அழிவு அவனை தேடி வந்தது.

### நரகாசுரன்

பொருளாசையும், தன் மனைவி மக்கள் மீது கொண்டிருந்த கண் மூடிய ஆசையெனும் காமம் கொண்டிருந்த நரகாசுரன் அழிவை தடுக்க முடியாதவனானான்.

கார்த்த வீர்யாச்சுனன்

செல்வ செருக்கு எனும் மதம் பிடித்தவனாக திகழ்ந்த கார்த்தவீர்யாச்சுனன், எவரையுமே துச்சமாகக் கருதும் குணத்தைப் படைத்திருக்கவே, அதுவே காரணமாயிற்று, அவன் அழிவைத்தழுவ!


### பகாசுரன்

அசுர பலம் கொண்ட பகாசுரன், தன்னைப்பற்றியிருந்த குரோத குணத்தால் பல பேர்களை அழித்துவிட, அதன் விளைவாக அவனும் அழிய நேரிட்டது.

### அருணாஷதன்

தனக்கு நேர்ந்ததை போன்ற துயரம் என்கிற ஈர்ஷை (சமஸ்கிருதத்தில்) பிறருக்கும் ஏற்பட வேண்டும் என அருணாஷதன் விரும்பியதே,அழிவு ஓடோடி வந்து அவனை அணைத்தது.

இப்படி எத்தனையோ அக்கால புருஷர்கள் அழிந்து போனதை இக்கால சில அரசியல்வாதிகள் எண்ணிப்பார்க்க வேண்டும். அவர்கள் மட்டுமல்ல ஏன் நாம் கூடத்தான்!





# நான்கு மறை தீர்ப்பு

அருளியது தாஸ்கனு என்ற ஷிர்டி மகானின் அதீத பக்தரும் அவர் கூடவே சேவை புரியும் அணுக்கத் தொண்டரும் கூட

“சீரடி மாஜே பண்டர்பூர்” என்று மராத்திய மொழியில் இயற்றப்பட்ட பக்தி பாடலின் முதல் வரி கொண்டதின் தமிழ்மொழி பெயர்ப்பே மேலே கூறப்பட்டது.

இந்த பண்டரிபுரத்தில் குடிகொண்ட ஸ்ரீ கிருஷ்ணனான விட்டல நாதனுடன் தொடர்பு கொண்ட இச்சம்பவம் பக்தியை தூண்டும் ஒன்றாக அமையும்!

“மகாதாரா“ என்று மகான் ஷீர்டி நாதன் செல்லமாக அழைக்கும் தார்திகாபாபா என்ற பெயரைக் கேட்டாலே ஆனந்த கண்ணீர் வடிக்கும் தீவிர பக்தர் ஆவார்.

அவருடைய அருமை மனைவி சுமார் 60 வயதுள்ளவள், குள்ள வடிவில் காணப்பட்டாலும் மகான் பாபா மீது எல்லையற்ற பக்தி உள்ளவள். ஆனால் அதே சமயம் பகவான் விட்டலின் மீதும் ஆழ்ந்த பக்தி கொண்டிருந்தாள். அவள் கொண்ட வாழ்நாள் லட்சியம், எப்படியாவது சற்று தொலைவில் உள்ள பண்டரிபுரம் சென்று அந்த மாயக் கண்ணனை நேரடியாக தரிசித்து ஆனந்தம் அடைய வேண்டுமென்று, பண்டரிநாதன் மீது தன் உயிரையே வைத்திருந்தாள் எனலாம்.

புலிக்கு பிறந்தது பூனையாகுமா? இந்த மகான் பாபா கொண்டாடும் தம்பதியின் பிள்ளையான ஜோகிந்தரும்

ஊரார் மெச்சும், பாபாவின் பக்தனாகவிருந்தான்.

தன் பண்டரிபுர பயண ஆசையை அவள் தன் செல்ல மகனிடம் அடிக்கடி கூறி வந்தும், அவன் பிடிகொடுக்காமலே நழுவி விடுவது சகஜமான நிகழ்வாகிவிட்டது. அந்தப் பிள்ளையை பொருத்தவரை மகான் பாபா தான் அனைத்து தெய்வங்களை விட மேலானவர் என்று.

தோன்றும் போதெல்லாம் தார்காட், அவரது மனைவி, பிள்ளை மூவரும் திடீரென ஷிர்டிக்கு தரிசனம் பண்ண புறப்பட்டு விடுவார்கள்.

தார்காட்டின் மனைவி மகானிடம் ஒவ்வொரு முறையும் பிரார்த்தித்து கோருவது ” ஐயனே! நான் பண்டரிபுர விட்டலனை என் வாழ்நாளில்

ஒருமுறையேனும் சென்று தரிசிக்கும் வாய்ப்பை அளியுங்கள்" என்று.

சமீப தினத்தில் கடைசியாக பாபாவை நேரடியாகவே பண்டரி பக்தை கேட்டுவிட்டாள்" மகானே! எனக்கு ஒரு வாய்ப்பு அருளுங்கள், பண்டரிபுரம் செல்ல" என. அப்போது மகான் களிப்புடன் அவளை நோக்கி " தாயே தங்களுக்கு அனைத்துமே ஷிர்டியாகயிருக்கையில், பண்டரிபுர யாத்திரை சிந்தனை எப்படி வந்தது? என மறைமுக பதிலளித்து, அந்த பக்தையை வாயடக்க செய்துவிட்டார். இதனால் ஏமாற்றமுடன் தார்காட்டின் மனைவி ஊர் திரும்பி விட்டாள். ஆனால் அவள் மனமோ ஓயாமல் பண்டரி யாத்திரையைச் சுற்றியே வந்து கொண்டிருந்தது.

சில மாதங்கள் கடந்த பின்னர், மீண்டும் ஷிர்டி சென்று தார்காட்டின் மனைவி பாபாவை தரிசித்தாள். உள்மனது தூண்டவே, அவள் மகானிடம்" தெய்வமே, தாங்கள் நான் பண்டரிபுர விட்டலின் தரிசனம் பெற இம்முறையாவது அனுமதிப்பீர்களா!" என கெஞ்சும் குரலில் விண்ணப்பம் செய்தாள். அந்த பக்தையே

பெரும் வியப்புக்கு உள்ளாகும் வகையில் மகான் "அம்மையே! தாராளமாக உன் பண்டரிபுர விட்டலின் தரிசனத்தை பெறலாமே" என எதிர்பாராத அனுமதியை வழங்கி விட்டார்.

"ஆஹா! இன்று, என் வாழ்வின் பொன்னாள்" என மகிழ்ந்து போன அம்முதிர்ந்தபக்தை விரைவுடன் தன் ஊர் திரும்பினாள்.

தார்காட்டிடம், அவர் மனைவி பாபாவின் இசைவு குறித்து தகவல் சொன்னபோது அவரோ, பிள்ளை ஜோகிந்தரோ இதனை முதலில் நம்பத்தான் இல்லை. பிறகு மனைவியின் தீவிரத்தை புரிந்து கொண்ட அவர், ஜோகிந்தரிடம், "அம்மாவை நாளையே பண்டரிபுரத்திற்கு ஜாக்கிரதையாக அழைத்துச் சென்று தரிசனம் செய்யவை" எனக் கேட்டுக்கொண்டார்.

சில நாட்கள் பயணித்த ஜோகிந்தரும், அவன் தாயாரும், பண்டரிபுரம் வந்து சேர்ந்துவிட்டனர். கூட்டமான கூட்டம். பக்தர்கள் க்யூ வரிசை நிமிடத்திற்கு நிமிடம் நீண்டு கொண்டே சென்றது.

புனித ஸ்நானத்தை ஆற்றில் முடித்துக்கொண்டு அம்மாவும் பிள்ளையும் பூஜைக்குரிய உடைகளை அணிந்து, விட்டலின் ஆலய பக்கம் பூஜை மாலை பொருட்களுடன் வந்தபோது, க்யூவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் நிற்பதைக் கண்டு மலைத்துப் போய்விட்டனர்.

சட்டென ஒரு முடிவு எடுத்த தார்காட்டின் மனைவி ஜோகிந்தரையும் இழுத்துக்கொண்டு நேரே அங்கிருந்த பண்டரிபுர ஆலய நிர்வாக அலுவலகம் சென்று அங்குள்ள பிரதான அர்ச்சகரை போய் வணங்கினாள்.

"என்னம்மா வேண்டும்?" என அவர் பரிவுடன் கேட்கவே, பண்டரிநாத பக்தை தன் கையில் உள்ள பெரிய பூஜை மாலையை காட்டி," நான் மனதில் வேண்டிக் கொண்டபடி என் பிரியத்திற்குரிய பண்டரிநாதனுக்கு என் கையாலேயே மாலையை அணிவிக்க வழி செய்ய வேண்டும்." எனக் கெஞ்சிய குரலில் வேண்டுகோள் விடுத்தாள். அந்த அர்ச்சகர், இரக்கப்பட்டு, அவள் கூட ஒரு தேவஸ்தான ஆளையும் அனுப்பி அதற்கு அனுமதித்தார். அப்போது அவர் ஒரு நிபந்தனையும் கூறினார்.

"அம்மா! நீங்கள் மாலையை அங்குள்ள அர்ச்சகரிடம் தந்தால் அதை அவர் விட்டலனுக்கு சூட்டி விடுவார். எக்காரணம் கொண்டும் பண்டரிநாதனின் உயர் பீடத்தில் ஏறக்கூடாது" என்றார்.

ஜோகிந்தர், தேவஸ்தான ஆளுடன் திருமதி தார்காட் வெகு சுலபமாக, அவளுடைய நீண்ட நாள் கனவான பண்டரியின் தரிசனம் பெற, அவருடைய சந்நதியை அடைந்துவிட்டாள்! தேவஸ்தான ஆளுடன் வந்ததால் அவள் ஒரு VIP ஆக கருதி பகவானின் சந்நதியின் உயர் பீடத்துக்கு கீழே அமர்ந்து தியானிக்கவும், அங்கிருந்த பிரதம அர்ச்சகர் அனுமதித்து விட்டார். அங்கு அவளும் மகனும் சுமார் ½ மணி நேரம் பிரார்த்தனையில் ஈடுபட்டனர். அந்த பண்டரி பக்தைக்கு எப்படியாவது கொண்டு சென்ற மாலையை உயர் பீடத்தில் ஏறி தானே அணிவிக்க ஆசை, இல்லை இல்லை பேராசை பட்டாள். இந்தக் கோரிக்கையை கேட்ட அர்ச்சகர், உடனே அதை நிராகரித்து விட்டார். ஏனென்றால் எந்த **VIP**யும் உயர் பீடம் ஏற ஆலய சம்பிரதாயங்கள் இடம்கொடுக்கவில்லை.

இந்த மறுப்பால் மிக முக வாட்ட முற்ற தாயின் நிலையை காண சகியாத ஜோகிந்தர்,"அம்மா! கவலை வேண்டாம். நாம் நமது இஷ்ட தெய்வம் பாபாவை

வேண்டிக்கொள்வோம்". என யோசனை தர அவளும் உடனே மகானை மனதால் வேண்டத் தொடங்கினாள்.

அப்போது ஒரு பெரிய அதிசயம் நிகழ்ந்தேறியது. ஒரு பெரிய பேரொளி சூழ, உயர் பீடத்தில் பக்தர்களுக்கு அருட் காட்சி அளித்து கொண்டிருந்த பகவான் பண்டரிநாத திருவுருவே தம்பீடம் இறங்கி நேரே தன் சந்நதியில் நின்றுகொண்டிருந்த தார்காட்டின் மனைவியிடம் விரைந்து சென்று குள்ள உருவமான அவளுக்கு தக்கவாறு கீழே தலைகுனிந்து நின்றது. மெய் சிலிர்ப்புற்ற பக்தை உடனே கையில் வைத்திருந்த பெரிய மாலையை திரு உருவின் கழுத்தில் சூட்டியதும், தலையை நிமிர்த்தி பின்பு வேகமாக தனது ஸ்தானத்திற்கு போய் வழக்கமாக நிலை கொண்டுவிட்டது. அங்கிருந்த அனைத்து பக்தர்கள் கூட்டமும், அர்ச்சகர் குழுவும், ஜெய் ஜெய் விட்டலா பண்டரிநாதா என ஆச்சர்யமுடன் கோஷித்தனர்.

அம்மா, பிள்ளை இரண்டு பேருமே இது கனவா நிஜமா என திகைத்து, ஆனந்த கண்ணீர் விட்டவாறே இருந்தனர். தங்களை விட்டல நாதன் தரிசனம் பெற அளித்த மகானின் கனிவு கொண்ட உள்ளம், பகவானே நேரில் அதுவும் தலைகுனிந்து அதுவும் தங்களிடம் மாலையை ஏற்ற நேர்த்தியையும் அளித்து விட்டதே!! என்று சொல்லி அந்த பகவன் சன்னதிலேயே மனப்பூர்வமாக அவர்கள் நன்றிகளை மகான் பாபாவுக்கு காணிக்கையாக்கினர்.

நிறைந்த மனதுடன் ஜோகிந்தரும், அன்னையும் ஊர் திரும்பி தார்காட்டிடம், விவரமாக கூறவே, அவர் ஆனந்த அதிர்ச்சியிலிருந்து மீள ரொம்ப நேரம் ஆனது." இவ்வளவு புண்ணியம் செய்த குடும்பமானதே நம் குடும்பம்" என பெருமைப்பட்ட அவர் தன் மனைவியை அணைத்து மகிழ்ந்தார்

"என்னவளே! உன்னால் அல்லவோ இந்த அரும்பாக்கியம்" எனக் கோடி மகிழ்வுடன் கூறினார். அவளோ விட்டுக்கொடுக்காமல் உங்களை மணந்ததால்தானே அது கிடைத்தது என்று பூரிப்புடன் பதிலளித்தாள்.

ஓரிரு தினங்களுக்குள்ளேயே தார்காட், அவரது மனைவி, பிள்ளை சகிதம் ஷீர்டிக்கு பயணமானார். மகான் பாபாவை அந்த பண்டரிநாத பக்தி வழங்குகையில் மகான் குறும்புடன்," என்ன ஆயி! உன் உள்ளத்தில் இருந்த விட்டலன், தன்னிடம் விட்டு உன்னிடம் வந்தானமே?" என்று கேட்க, அவள் மகானே!" தங்களுடைய பரிபூரண அருளும், ஆசிகளும் தான் அதற்கு காரணம்" என்று களிப்புடன் கூறி, பன்முறை மகானை நமஸ்கரித்தாள்.

"எவரொருவர் என் உபதேசத்திற்காகவும், என் உதவிக்காகவும் என்னை மனதால் அடைந்தாலே போதும், அவைகளை அவருக்கு தயங்காமல் உடனே வழங்குவேன்"-

மகான் ஷீர்டி நாதனின் வாக்கு.

ஜெய் ஸ்ரீ சாய் பாபா!



ஆரூர். ஆர். சுப்பிரமணியன்

# அரிய ஆன்மீக தகவல்

# மதுரையின் சிற்பங்கள்



மரகத மங்கையாம் அன்னை மீனாட்சி ஆட்சி செய்யும் மாமதுரை ஆலயத்தின் சிறப்பே சொக்கநாதரும் மீனாட்சி அம்மையும் என்றால் அது மிகையாகாது!

எல்லோரும் அறிந்ததும் இதனைத்தான்! ஆனால், இந்த ஆலயத்தில் உள்ள சிற்பங்கள் சாகாவரம் பெற்றவை என்பதும் தமிழரின் சிற்பக் கலையை உலகுக்கே பறைசாற்றும் உன்னதம் நிறைந்தவை என்பது எத்தனை பேருக்கு தெரியும்?!

இந்த ஆலயத்திற்கு வருவோர் அம்மையையும் அப்பனையும் தரிசனம் செய்த திருப்தியோடு செல்கிறார்கள். இந்த தெய்வங்களுக்கு இணையான தெய்வீக சிற்பக்கலையின் சான்றுகள் இவ்வாலயத்திலே உள்ளது. அதனை கண்ணாரக்கண்டு கலையழகில் மயங்கி, கருத்தினில் புதைப்பதே சிறப்பு! ஏனெனில், அம்மனின் அருளாட்சியைப் போலவே காலத்தால் அழியாத சிறப்பினை பெற்றவை இந்த சிற்பங்கள்!

இங்கு, "ஆயிரம் கால் மண்டபம்" என்பது சிற்பக்கலையின் கருவூலமாய்த் திகழ்கிறது! இம்மண்டபத்தின் உள்ளே நுழைய, நான்கைந்து படிகள் ஏறி உள்ளே சென்றதுமே இருபுறமும் வரிசையாக சுமார் 6 அடி உயர சிற்பங்கள் பல இருப்பதைக் காணலாம்.

குறிப்பாக,குறத்தியின் சிற்பம் கண்களையும் நம் கருத்தையும் கவர்வதாய் உள்ளது!குறவர்குலப் பெண்கள் தங்கள் கூந்தலை அள்ளி முடிந்து கொண்டை போடுவதை நாம் பார்த்திருப்போம்!அதேபோல... அழகாக சீவி விட்ட கூந்தலை அள்ளி முடித்த அந்த குறத்தியின் சிற்பத்தில் மயிரிழைகள் ஒவ்வொன்றையும் தனித்தனியாய் காணுமளவிற்கு ஊசி முனையில் உருவான காவியமாய் உளியின் நுனி விளையாடி இருப்பது விந்தையிலும் விந்தை!

இது மட்டுமா?குறத்தியின் கையில் ஓலைக்கூடை இருக்கிறது!

நாம் ஓலை கொண்டு ஒரு பொருளைப்பின்னுகின்ற போது, ஓலைகள் குறுக்கும் நெடுக்கு மாயும் மேலும் கீழுமாயும் ஏறி இறங்கும். வளைவுகள் நெளிவுகள் அனைத்தையும் தத்ரூபமாக உளி முனையில் உருவாக்கி இருப்பதைக் கண்டு வியக்காமல் இருக்க முடியாது!

உயரிய சிற்பக்கலைக்கு உதாரணம் இது!

சற்று உள்ளே நுழைந்ததும் மண்டபத்தின் மையப்பகுதியை நோக்கி செல்கையில் இடதுபுறம் ஒரு அழகு மங்கையின் சிற்பம்! அம்மங்கைக்கு மூக்கு குத்தியிருக்கும் துளை அப்பட்டமாய் தெரிகிறது! மூக்கின் மேல் உள்ள அந்தத் துளையில் ஒரு மூக்குத்தியை போட்டு அழகு பார்த்து திரும்புவோர் ஏராளம்!



பிச்சாடனரின் சிற்பத்தில் அவரது கையில் உள்ள டமருகம் என்னும் உடுக்கையில் தட்டினால் அடுத்த கையில் அந்த சப்தத்தை காதை வைத்தால் கேட்பது அபூர்வம்!


இவை தவிர, ஆயிரக்கணக்கான சிற்பங்கள் பண்டைய தமிழரின் வாழ்வியலை பறைசாற்றுவதாய் அமைந்துள்ளன. பெண்களை வன்புணர்வு செய்பவருக்கு தண்டனை கொடுப்பதாய் அமைக்கப்பட்டிருக்கும் சிற்பம் சிறப்பானது!

மதுரை மீனாட்சி அம்மன் ஆலயம் செல்லும் நாம் இவற்றையெல்லாம் பார்க்கிறோமோ இல்லையோ, தமிழே தெரியாத மேலைநாட்டினர் இவற்றைப் பார்த்து வாய்பிளந்து அதிசயிக்கும் நிகழ்வுகள் தினமும் நடக்கின்றது! நாம் கடவுளை வணங்க, அவர்கள் கலையை வணங்குகின்றார்கள்.



ரா. பன்னீர்செல்வம்

# கோடி இன்பம் அருளும் குமரக் கோயில்



"துதிப்போர்க்கு வல்வினை போம் துன்பம் போம்
நெஞ்சிற் பதிப்போர்க்குச் செல்வம் பலித்து கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலரருள் கந்தர் சஷ்டி கவசந்தனை
அமரரிடர் தீர அமரம் புரிந்த குமரனடி நெஞ்சே குறி"

என்று பாடல் மென்மையாக ஒலிக்க வைகறைப் பொழுதில் முருகப்பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் அற்புதமாக நடைபெறுவது உண்டு.

உலகெங்கும் ஸ்ரீ விநாயகப் பெருமானுக்கு கோயில்கள் உள்ளதைப் போன்று ஸ்ரீ முருகப் பெருமானுக்கும் அதிக அளவில் கோயில்கள் அமைந்துள்ளது. அறுபடை வீடுகள் கொண்ட முருகன் குன்றுதோறும் வீற்றிருப்பவன் என்றாலும் ஐவகை நிலங்களிலும் எழுந்தருள் புரிந்து அருள்பாலிப்பவன் ஆறுமுகன்!

கடலூர் நெய்தல் நிலமும், மருத நிலமும் சங்கமிக்கும் அற்புதப் பகுதி! இப்பகுதியின் பெயர் கடலூர் புதுநகர் என்றும் அழைக்கப்படுகிறது. தெற்கே இருந்து வருபவர்களுக்கு, இவ்வூர் சிதம்பரத்தை அடுத்துள்ளது. புதுவையிலிருந்து ஒரு மணி நேர பயண தூரத்தில் கடலூர் அமைந்துள்ளது. கடலூர் புது நகரை திருப்பாதிரிப்புலியூர் என்று அழைக்கப்படுகிறது. இப்பகுதியில் தான் ஸ்ரீ பாடலேசுவரர் கோயில் அமைந்துள்ளது.

முன்பு கடலூரை புதுநகர் என்றும் கூடலூர் என்றும் அழைக்கப்பட்டது. கூடலூர் என்று ஏன் பெயர் வந்தது? என்பதை அறிந்தால் மெய் சிலிர்க்குமாம். குமரக் கோயிலில் எழுந்தருளி உள்ள
ஸ்ரீ கூடலீஸ்வரர். ஸ்ரீ கூடலீஸ்வரி பெயரால் இவ்வூர் பெயர் வழங்கப் பெறுவது பெருஞ்சிறப்பு.

கடை ஞாழலூர், என்ற பெயரும் இலக்கிய மற்றும் புராண நூல்களில் உள்ளதை காணலாம்.

குமர கோயில் என்று அழைக்கப்பெறும் இக்கோயில் அருள்பாலிப்பது ஸ்ரீ முத்துக்குமார சுவாமி. சுவாமியின் கருவறை மிகுந்த அற்புத அருள் நலம் வாய்ந்தது.

வள்ளி தெய்வானையுடன் அருள் முகங்கள் ஆறு கொண்டு மயில் வாகனத்தில் அடியவர்களுக்கு அருளும் ஆறுமுகப்பெருமான்!

முருகனுக்கு உகந்த சஷ்டி- பங்குனி, உத்திரம், கிருத்திகை முப்பொழுதும் முருகப்பெருமானை உள்ளமுருக வழிபடும் கூட்ட வெள்ளத்தை காண கண் கோடி வேண்டும்.
இந்த கடலூர் புதுநகர் ஸ்ரீ குமர கோயிலை தன் வாழ்வாகவே முப்பொழுதும் நினைப்பவர்கள் சகல யோகங்களை பெறுவர். அஷ்டமா சித்திகளும் கூட ஆயுல் முழுதும் சித்திக்கும். வாழ்வும் தித்திக்கும்.

கோயில் ராஜகோபுரம் இல்லை. இது மிக மிகப் பழமையான கோயில், சுற்றுப்பிரகாரத்தில் சுவாமி இல்லாத கோயில் ஒன்று உள்ளது. அதுவும் பாழடைந்து இருக்கிறது.

பொதுவாக விநாயகர் சந்நதி முகப்பில் இருக்கும். ஆனால்
ஸ்ரீ விநாயக சந்நதி கோயில் பின்புறத்தில் அமைந்துள்ளது மிகுந்த ஆய்வுக்குரியது.

தென்முக கடவுளாம் தட்சிணாமூர்த்தி சந்நதி- சனீஸ்வர தனி சந்நிதியும் அமைந்துள்ளது.

சிதம்பரத்தின் அமைப்பு போல் கல்மண்டபம்- கருவறை அமைந்த விதம் அற்புதம் வாய்ந்தவை.

சிதம்பரம் ஸ்ரீ நடராஜ பெருமானும் ஸ்ரீ சிவகாம சுந்தரியும் அருட் காட்சி அளிக்கிறதைப் போன்று கல் மண்டபத்தின் எதிரே அழகிய கல் வேலைப்பாடுகள் அமைந்த சந்நதியில், ஸ்ரீ நடராஜ பெருமானும் ஸ்ரீ சிவகாம சுந்தரியும் அருட் காட்சி அளிப்பதை தரிசிக்கலாம்.

வள்ளலார் முதல் வாரியார் வரை சமய சொற்பொழிவுகள் ஆற்றி உள்ளனர்.

இக்கோயிலில் சென்ன கேசவப்பெருமாள், தாயாருடன் அருட்காட்சி அளிக்கும் அற்புத சந்நதி உண்டு. மூலவரும் உற்சவரும் இணைந்த கோலத்தில் இருப்பதை காணலாம்.

வைகுண்ட ஏகாதேசி நாளில் ஸ்ரீ கருடவாகனத்தில் பெருமாள் சொர்க்க வாசல் தரிசனம் தந்து மக்கள் வெள்ளத்தில் பெருமாள் வீதி உலா வருவதைக் காண கண்கள் கோடி வேண்டும்.

குமரக் கோயிலில் பிரதான உற்சாகமாக இருப்பது சூரம்சம்கார வைபவமும், கந்தசஷ்டி பெருவிழாவும் மிக சிறப்பாக நிகழ்வது உண்டு.

முருகன் அடியவர்கள் பால் காவடி,பன்னீர் காவடி, புஷ்ப காவடி விரதம் இருந்து பயபக்தியுடன் முத்துக்குமார சுவாமிக்கு, "அரோகரா" என்று முழங்கிய படியும். அருணகிரிநாதர் சுவாமி அருளிய திருப்புகழைப் பாடியும், நெஞ்சுருகி வழிபடுவதை காணலாம்.

கடலூர் குமாரக்கோயில் தெருவில் இந்த முருகன் ஆலயம் அமைந்துள்ளது.

சோழர்கள் ஆண்ட சோழ மண்டலத்தில் இக்கோயில் அமைந்துள்ளது என்றாலும், பாண்டியர் சின்னமான மீன் சின்னங்கள் புடைப்பு சிற்பங்களாக கருங்கள் மண்டப மேற்கூரையில் செதுக்கப்பட்டு உள்ளது ஆய்வுக்குரியது. கோயில் பிரதான பிரகாரத்தில்- சுவாமி பிரதிஷ்டை செய்யப்படாத பாழடைந்த கோயில்- இன்றுவரை எந்தவித சீரமைப்பும் செய்யாமல் இருப்பதும் ஆய்வுக்குரியது.

மிகவும் புராதனமான சந்நதிகளும், சிற்பங்களும், மதிப்பீடே செய்யமுடியாத சுவாமி விக்கிரகங்களும் உள்ள மிக பழமையான இத்தலம்.

ராஜ கோபுரம் இல்லாத கோயிலாக இருப்பதும் அதிசயம்தான். இக்கோயிலை ஒருமுறை தரிசிக்க வருகை தந்த அருள்மொழி அரசு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள், வயலூர் எனக்கு மகிழ்ச்சியும் ஆனந்தத்தையும் தருகிறதோ அதேபோன்று பெரும் மகிழ்ச்சியை தருகிறது என்று குமரக் கோயில் என்றும், எந்த

காரணத்தாலோ மகா கோபுரம் எழுப்ப படாமல் போனதோ தெரியாத செய்தியாகும்.

இக்கோயிலின் ராஜகோபுரம் எழுப்பப்பட்டால் இந்நகரமே உயரும் என்பது நிதர்சனமான உண்மை.

முருகப்பெருமான் எதிரே அழகிய வேலைப்பாடுகள் கொண்ட மயில் சிலை அமைக்கப்பட்டு உள்ளது. இக்கோயிலில் கிருத்திகைகளில் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் அற்புதமாக நடைபெறுவது உண்டு. பங்குனி உத்திரம் மிகவும் விசேஷம், பிரதோஷம், சங்கடஹர சதுர்த்தி என பிற விசேஷங்களும் நடைபெறுவது உண்டு.

தீராத வியாதிகள் கூட தீரும். வாழ்வில் அதிக துன்ப துயரங்கள் கொண்டவர்கள் இத்தல முருகப்பெருமானை மனமுருக வழிபட்டால் இனிய வாழ்வை பெறலாம்.

திருமண தடை விலக, இனிய இல்லற வாழ்வை பெற இத்தலத்தில் எழுந்தருளி உள்ள ஸ்ரீ துர்க்கையை மனதார வழிபட்டு நெய்விளக்கு ஏற்றி வழிபடலாம்.

கிழக்கு திசை நோக்கி அமைதியாக அருள் பாலிக்கும் ஸ்ரீ கூடலீஸவரர் சந்நிதியும், தென் திசையை நோக்கியபடி, ஸ்ரீ கூடலீஸ்வரி சந்நிதியும் அமைந்து அருள்பாலிப்பது வேறு எங்கும் காண முடியாத சிறப்பாகும்.

அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகியாக திகழும் உலகம்மை தன் முருகனிடம் சக்தி வேலை தரும் அற்புதக் காட்சியை, வேல் வாங்கும் நிகழ்வில் தரிசிக்கலாம்.

பிரதோஷ நாட்களில் நந்திகேஸ்வர பூஜையும் சிவமகா பூஜையும் நடப்பது காணக்கிடைக்காத அரிய தரிசனம், இதைக் கண்ணாரக் கண்டு ஆனந்திக்கலாம்.

சமயக்குரவர் நால்வர் சந்நிதியும் மிகுந்த சிறப்புக்குரியது.

அழகன் முருகன் ஸ்ரீ தெய்வானை, ஸ்ரீ வள்ளி சமேதராக ஸ்ரீ முத்துக்குமார சுவாமி ஆறுமுகங்களுடன் பன்னிரு திருக்கரங்களுடன் அழகிய மயில் மீது அமர்ந்து நமக்கு அருள்பாலிப்பது நாம் நமது பூர்வ ஜன்ம பாக்கியம் என்றே சொல்லலாம்.

இவ்வளவு மிகுந்த அருள் சிறப்புகள் கொண்ட இக்கோயில் வளாகத்தில் எவ்வித சுவாமியும் பிரதிஷ்டை செய்யப்படாமல், மிகவும் பாழடைந்த கோயில் உள்ளது மிகவும் நெருடலாக உள்ளது.

பக்தர்கள் கேட்கும் வேண்டுதல்களை, உடன் நிறைவேற்றித் தரும் ஓம் சரவண பவன் வாஞ்சை மிகு வடிவேலவன்.

இக்கோயிலுக்கு முருக பக்தர்கள், கடல் அலைகள் போல அணி அணியாக தரிசிக்க வரவேண்டும்.

தெய்வம் நலம் மிக்க திருமுருக திருவருளால் ராஜகோபுரம் எழவேண்டும். கடலூருக்கு வருகை தந்து கந்தக் கடவுளை சொந்தக் கடவுளாக போற்றி வழிபடுவோம்.

ஆறுபடை வீடு என்பது, அனைவருக்கும் தெரியும். ஏழாவது படைவீடாக மருத மலையை சொல்லுவார்கள். எட்டாவது படைவீடாக கடலூர் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி கோயிலை, ஸ்ரீ குமரக்கோயிலை மனமகிழ்வுடன் செல்லலாம், முருகன் அருளால் வாழ்வில் வெல்லலாம்.



சைவ சித்தாந்த செம்மல்
**கவிஞர். சீனு. செந்தாமரை**
கடலூர்

# ஆன்மிக சிறுகதை

# காதறுந்த ஊசிகள்



அந்தப் பகுதியிலேயே பெரிய மருத்துவமனை அது!
ஐ சி யு வின் மூடிய கதவுகளுக்கு வெளியே சோகமே உருவாய் அமர்ந்திருந்தார் பெரியவர் சிவமூர்த்தி! அவருடைய கண்களில் நிரந்தரமாக நீர்த்திரை!

அவருடன் பல காலம் பழகிய நெருங்கிய நண்பர்கள் சிலர் அவருக்கு ஆறுதல் சொல்லும் விதமாக அருகில் அமர்ந்திருந்தனர். ஒரு ஓரமாக நின்றபடி சிவ மூர்த்தியின் மகன் வாசு போனில் யாருக்கோ செய்தி சொல்லிக்கொண்டிருந்தான்! அவனது மனைவி நந்தினி,, சேரில் அமர்ந்து, வலுக்கட்டாயமாக சோகத்தை வரவழைத்துக்கொண்டிருந்தாள். நந்தினியின் அருகில் அவளது பத்து வயது மகனும் எட்டு வயது மகளும் செல்போனில் ”கேம்”விளையாடிக்கொண்டிருந்தனர்.

ஐசியூ விலிருந்து டாக்டர், நர்சுகள் வருவதும் போவதுமாக இருந்தார்களே தவிர, சிவமூர்த்தியிடம் யாரும் எதுவும் சொல்லவில்லை. அவர்களது பரபரப்பு, சிவமூர்த்திக்கு பரபரப்பை உண்டாக்கியது.

வாசு, போனில் யாரிடமோ கோபமாய் பேசினான்…” டேய், இப்ப வேணும்; முடியுமா? முடியாதா?... சரி, விடு!... என தொடர்பைத் துண்டித்தான். இது எதுவுமே தன் நினைவுகளை பாதிக்கா வண்ணம் தன் மனைவி தன் குடும்பத்திற்காக உழைத்து இன்று இந்த நிலைக்கு வந்ததை மட்டுமே நினைவில் கொண்டபடி வேதனையில் இருந்தார் சிவமூர்த்தி!

அவரது தோளைத் தொட்ட நண்பர் சுவாமிநாதன் ”இந்தாப்பா மூர்த்தி…தங்கச்சிக்கு எப்படி இத மாதிரி ஆச்சு?” என்று கேட்டார்.
ராத்திரி ஒரு மூணு மணி இருக்கும்;தடால்னு சத்தம் கேட்க, முழிச்சு பார்த்தேன்… தண்ணி டம்ளர் உருண்டது; இவ தரையில மயங்கி விழுந்திருந்தா; பதறிப் போயிட்டேன்! உடனே என்ன மீறி கத்தினேன்; பையன் வாசு எழுந்து வந்தான்; உடனே இங்கு கொண்டு வந்து சேர்த்துட்டோம்!” என சோகம் கலையாமல் சொல்ல, கரைகட்டி நின்ற கண்ணீர் கன்னங்களில் உருண்டது. மேற்கொண்டு பேசமுடியாமல் விம்மினார்!
”டாக்டர் என்னதான் சொன்னாங்க!?” கேட்டார் நண்பர்.
விரக்தியாக ”என்ன சொன்னாங்க?”... ஒன்னும் சொல்லல! அம்பதாயிரம் ரூபாய் உடனே கட்டுங்க! ட்ரீட்மென்ட் ஆரம்பிச்சிடறோம் சொன்னாங்க! நான் என்ன பண்ணுவேன்?! குடும்ப செலவிற்கு கொடுத்ததில மிச்சப்படுத்தி அவளே சேர்த்து வச்ச பணம் ஒரு இருபது ஆயிரம் இருந்தது; பையன் ஒரு முப்பதாயிரம் புரட்டி கொடுத்தான்! பணத்தைக் கட்டிட்டோம்! அதல இருந்து உங்கள மாதிரிதான் எந்த விபரமும் தெரியாம இப்படி உட்கார்ந்து இருக்கேன்,” அவரது பேச்சில் வேதனை அதிகமாகியது!.
அந்த வேதனையில் பங்கு கொண்டவராய் நண்பர் ”ஹாஸ்பிடல்னாவே, இதுதான் பிரச்சனை! கேட்ட பணத்தை கொடுத்தாலும் என்ன ஏதுன்னு சொல்லாம அல்லாட விட்டுடுவாங்க! அதுதான் நமக்கு வலியையும், வேதனையும் அதிகமாக்கும்!” ஆறுதலாய் சொன்னவர்,
”ஆமா.., தங்கச்சிக்கு வயசு என்ன இருக்கும்?!

"என்னைவிட மூணு வயசு இளையவ! அம்பத்தி ஒம்பது வயசாகுது!
என்னைய கல்யாணம் பண்ணிக்கிட்டு வந்த நாள்ல இருந்து என் அப்பா, அம்மா,நான், என் மகன், என் மகள் எல்லோருக்கும் சேவ செஞ்சா! ஒருநாள் கூட முகம் சுளிச்சதில்ல!
இப்பதான் கேஸ் ஸ்டவெல்லாம்! அப்பல்லாம் விறகடுப்பு தானே?!
வெறகோடு விறகா தீயில வெந்து எங்களை கவனிச்சிகிட்டா! இன்னைக்கு நான் ஒரு மனுஷனா நிமிர்ந்து நிக்க காரணமே அவதான்! இன்னைக்கு அவ இப்படி படுத்து கெடக்கிறத என்னால பார்க்க முடியலப்பா!" விம்மல் அழுகையாய் வெடித்தது!
நண்பர் அவரை ஆசுவாசப் படுத்தினார்.
ஒரு நர்ஸ் வந்து," டாக்டர் உங்களை கூப்பிடுகிறார்" என்றதும் சிவமூர்த்தி எழுந்தவாறு மகனை அழைத்தார்! சிவமூர்த்தியும் அவரது மகன் வாசுவும் டாக்டர் முன்னாள் அமர்ந்தார்கள். சிவமூர்த்தி" டாக்டர், என் மனைவிக்கு இப்ப எப்படி இருக்குங்க? அவ உயிருக்கு ஒண்ணும் ஆபத்து இல்லையே!?" கேட்டார்.



"அதத்தான் சொல்ல வந்தேன்! இப்போதைக்கு அவங்க உயிருக்கு ஆபத்தில்ல... ஆனா..." என்ற டாக்டர் அவர்களை உற்றுப் பார்த்தார்! சிவமூர்த்தி பதட்டத்துடன்"," ஆனா என்ன டாக்டர்?! கொஞ்சம் விபரமா சொல்லுங்க? கண்ணீர் உருத்தார்!

டாக்டர்" அவங்க இதயத்திலே, நாலு இடத்தில அடைப்பு இருக்கு, அது ஆபரேஷன் பண்ணி நீக்கியாகணும், இந்த ஆபரேஷன் அதிகபட்சம் மூணு மாசத்துக்குள்ள பண்ணியாகணும்... இல்லன்னா.. அவங்க உயிருக்கு உத்தரவாதம் கொடுக்க முடியாது! " என்றார்.

தோளில் கிடந்த துண்டை எடுத்து வாயில் ஒற்றியபடி அழுதார், சிவமூர்த்தி!
மகன் வாசு டாக்டரிடம், "வேற எதுவும் பண்ண முடியாதுங்களா டாக்டர்?"என்றான்!

"இப்போதைக்கு மருந்து மாத்திரை கொடுக்கலாம், ஆனா மூணு மாசத்துக்குள்ள ஆபரேஷன் பண்ணாத்தான், அவங்கள காப்பாத்த முடியும்.. நீங்க பணத்துக்கு ஏற்பாடு பண்ணுங்க" என்றவாறு எழுந்தார்.
"சார்... சுமாரா எவ்வளவு செலவாகும்?" வாசு.
" அஞ்சுல இருந்து ஆறு லட்சம் வரைக்கும் ஆகும், கொஞ்சம் சீக்கிரம் ரெடி பண்ணுங்க" என்றபடி வெளியே சென்றார்.

அழுகையை தடுக்க முடியாமல் தவித்த சிவ மூர்த்தியை கைத்தாங்கலாக வெளியே அழைத்துவந்தான் வாசு!

சிவமூர்த்தியின் நண்பர் "என்ன ஆச்சு" எனக்கேட்க விபரம் சொன்னான். அங்கே கூடியிருந்த நண்பர்கள் உறவினர் அனைவருக்கும் விஷயம் பரவியது.

எல்லோரும் "உச்" கொட்டி பரிதாபப்பட்டதோடு, சிவ மூர்த்தியை அனுதாப பார்வை பார்த்தார்கள்.

ஒரு பெண்மணி," இருந்த இரண்டு ஏக்கர் நிலத்த வித்து தான் பெரிய பொண்ணோட கல்யாணத்தை முடிச்சாரு! பையனையும் படிக்க வச்சு கல்யாணம் பண்ணி வச்சாரு, இருக்கிறது அந்த ஓட்டு வீடுதான்... என்ன செய்யப் போறாருன்னு தெரியலயே...."
கவலையுடன் பேசியபடி வெளியேற,
இப்படியே, வந்திருந்த அனைவரும் மெல்ல மெல்ல சொல்லிக்கொள்ளாமல் கலைந்து செல்ல, ஓரிருவர் மட்டுமே சோகம் கலந்த மௌனத்தோடு நின்றிருந்தனர்.

சிவமூர்த்தியின் தோளைத் தொட்ட சுவாமிநாதன், ",மூர்த்தி...
ஒன்னும் கவலைப்படாத, கடவுள் இருக்கான்.. எதுக்கும் கவலைப்படாத! எல்லாம் சரியாகிடும்!" என்றவாறு வெளியே செல்ல.
சிவ மூர்த்தியின் மனம் மேலும் கலங்கியது,

ஊருக்குள் இருக்கும் குறிப்பிட்ட செல்வந்தர்களில் சுவாமிநாதனும் ஒருவர். தன்னிலை அறிந்து தன்னாலான உதவியை செய்வார் என்று எதிர்பார்த்தால் கடவுள் பார்த்துப்பான் என சொல்லிட்டு, பதிலுக்கு கூட காத்திருக்காமல் போய்விட்டாரே...இதுதான் நாற்பது வருட நட்பின் பலனா?... சிவ மூர்த்தியின் மனம் வலித்தது.
மகன் வாசு அருகில் வந்து," இப்படியே அழுது கிட்டு இருந்தா என்ன பண்ணமுடியும்பா? டாக்டர் கொடுக்கிற மருந்து மாத்திரைய வாங்கிட்டு மயக்கம் தெளிந்தவுடன் வீட்டுக்கு கிளம்பலாம்!அதான் மூணு மாசம் டைம் இருக்குதில்ல... என்ன பண்றதுன்னு யோசிப்போம்" என்று சொல்ல...

அவனை நிமிர்ந்து பார்த்த சிவமூர்த்தி, "அந்த மூணு மாசத்துக்குள்ள ஏதாவது ஆயிட்டா..?... என கண்ணீரோடு கேட்டார்." அவ்ளோதான் விதின்னு நினைச்சுக்க வேண்டியதுதான்".... என பளிச்சென்று பதில் சொன்னவன், தன் மனைவியை நோக்கி சென்றான்.

சிவமூர்த்தி செத்தே விட்டார்." அடப்பாவி ! அவ உன்ன பெத்தவடா!
கொஞ்சம் கூட இரக்கம் இல்லாம சொல்றியே"... என மனசுக்குள் மருவினார்.

வாசுவை சற்றே கோபமாக பார்த்த மனைவி நந்தினி, "ஆறு லட்சம்... நம்மால எப்படி முடியும்?! நீங்க என்ன பெரிய படிப்பா படிச்சீங்க!?வெறும் B.A. தானே ஏதோ உங்க வருமானத்தை வச்சு பசியில்லாமல சாப்பிடுறோம் கடன வாங்கி,ஆஸ்பத்திரிக்கு கட்டிட்டா சோத்துக்கு என்ன பண்றதாம்?!.. வயசாயிட்டா இதெல்லாம் சகஜம்னு மனச தேத்திக்க வேண்டியதுதான்?"" என சொல்ல...

தைரியத்தை வலுக்கட்டாயமாக வரவழைத்துக் கொண்ட வாசு," இல்ல நந்தினி... உன் நகைகளை அடகு வச்சா...ஒரு ரெண்டு லட்சம் கிடைக்கும்!".... சொல்லி முடிக்கும் முன்,
"நகைகளக் கொடுத்துட்டு....?... என் அம்மா வீட்டு உறவ ஒரேயடியா அறுத்திட சொல்றீங்களா?... நகையெல்லாம் எங்க அம்மா வீட்டோடது! என் தங்கச்சிக்கு கல்யாண ஏற்பாடு நடக்குது! இந்த நகையெல்லாம் வாழ்க்கைய தொடங்கப்போற என் தங்கச்சிக்கு கொடுக்க வேண்டி இருக்குது! அத மறந்துடாதீங்க!"நந்தினி சிடுசிடுவென சொன்னாள்.

அப்போது மூர்த்தி வாசுவை அழைத்தார் அருகே சென்றான்,"வாசு உன் அக்கா கனகா எப்பப்பா வருவா?"

"நான் போன் பண்ணதுமே அக்காவும் மாமாவும் கிளம்பிட்டாங்கப்பா! இதோ!... வர நேரம்தான்" சொன்னவன் மனைவியிடம் சென்றான் வாசு!

"வீட்டுக்கு வாழ வந்த மருமகள,மகளா நினைக்கணும் சொல்லுவாங்க! நானும் என் மனைவியும் மட்டுமல்ல நாட்டுல பல மாமனார் மாமியார் அப்படித்தான் நெனைக்கிறங்க!ஆனா, எத்தன மருமக தன் மாமனார், மாமியார அம்மா, அப்பான்னு நெனைக்கிறதில்லியே!

இப்ப நான் அனுபவிக்கிற துயரத்தில பாதிய என் மருமகளால குறைக்க முடியும், ஆனா அவளால அது முடியாது; மனசு வராது...கடவுளே!...
என் மகள் வரட்டும்; தாயோட இந்த நிலைமையை பார்த்தா அவளால தாங்கவே முடியாது! ஏதாவது வழி பிறக்கும்;" இவ்வாறு சிவ மூர்த்தியின் மனதில் எண்ணங்கள் அலை மோதியது!

கொஞ்சம் ஆசுவாசப்படுத்திக் கொண்ட சிவமூர்த்தி, நெருங்கிய நண்பர்கள்,உறவினர்கள் பல பேருக்கு போன் செய்து தன் நிலைமையை சொன்னார். எல்லோருமே ஆறுதல் சொன்னார்களே தவிர, ஒருவர்கூட பணத்தைப் பற்றி ஒப்புக்குக் கூட ஒரு வார்த்தை சொல்லவில்லை,நொந்து போனார்.

"அய்யோ...அம்மா..," என குரல் கேட்டு திரும்பிப் பார்த்தார், அவரது மூத்த மகள் கனகா,தலைவிரி கோலமாய் ஓடிவந்தாள், பின்னால் அவளது கணவன் பரந்தாமன்!
"அப்பா,அம்மாவுக்கு என்னப்பா ஆச்சு!? அய்யோ.. சொல்லுங்கப்பா...,அம்மா எங்கே? அம்மா என அவரது தோளை பிடித்து உலுக்கியபடி கதறினாள் கனகா!

சற்று நேரத்தில் மயக்கம் தெளிந்த நிலையில் சிவ மூர்த்தியின் மனைவியை டிஸ்சார்ஜ் செய்த டாக்டர்," பூரண ஓய்வு இருக்க வேண்டும்"என அறிவுறுத்தியதோடு மூன்று மாதத்திற்குள் ஆப்ரேஷன் செய்தாக வேண்டும் என அழுத்தமாக நினைவூட்டி அனுப்பினார்.
சிவமூர்த்தியின் மகள் கனகாவோ, வந்ததிலிருந்து

அழுகையை நிறுத்தவே இல்லை ஹாஸ்பிடலே அதிரும்படி கதறித்தீர்த்தாள்.

எல்லோரும் வீட்டிற்கு வந்தார்கள் சிவமூர்த்தி தன் நிலைமையை நொந்து கொண்டார் என்ன செய்வதென்று புரியாமல் உட்கார்ந்துவிட்டார்.பணத்தேவை என்று கேள்வி பட்டதற்கே கண்டும் காணாததுபோல ஒதுங்கி செல்கிறார்களே! கடவுளே!என்ன உலகம் இது துவண்ட நேரத்தில தோள் கொடுக்கத்தான் நட்பு! தோள் கொடுக்க தயாரா தான் இருக்காங்க! ஆனா..பணம் கொடுக்க..?..

ஒத்தாசையாக இருக்க வேண்டிய உறவுகள் பணத்தாசையால பதுங்குறாராங்களே!.. இதில் யாரை குற்றம் சொல்ல முடியும!. எதனாலும் முறியாத நட்பு கூட,பணம்னு வந்தா.. பஞ்சா சிதறுதே!
சிவ மூர்த்தியின் மனம் இப்படியெல்லாம் புலம்பித் தள்ளியது.

அம்மாவின் அருகில் இருந்து, நாத்தனார் நந்தினியை வைத்து எல்லா வேலைகளையும் வாங்கிய கனகா, அம்மாவிடம் விடை பெற்று கையில் பையுடன் அப்பாவிடம் வந்தாள்.

இன்னும் இரண்டு வாரத்தில் தன் மகளுக்கு நிச்சயதார்த்தம் நடக்கவிருப்பதை நினைவூட்டினாள். அங்கு ஓரமாய் நின்று கொண்டிருந்த தன் தம்பி வாசுவிடம்," இன்னும் மூணு மாசத்துல கல்யாணம்; தாய் மாமன் சீரு ஊரே மெச்சிற மாதிரி பண்ணனும்டா!"
என்றவள் தந்தையிடம்,"அப்பா உங்க பேத்திக்கு கல்யாணம்..
வாயார, வாழ்த்தினா போதும்னு நினைச்சிடாதீங்க ! என் புகுந்த வீட்டுல, உங்க அப்பா என்ன சீர் செஞ்சார்னு கண்டிப்பா கேட்பாங்க!"என்று சற்று கண்டிப்பாகவே சொன்னாள்.

திடீரென ஏதோ நினைத்தவளாய், "என் பொண்ணு கல்யாணம் முடியற வரைக்கும் அம்மாவை ஜாக்கிரதையா பார்த்துகுங்க ஆபரேஷனை எப்படியாவது பண்ணிடுங்கப்பா!!! நான் கிளம்பறேன், நிச்சயதார்த்த வேலையெல்லாம் அவர் தனியே பாத்துக்கிட்டு இருக்காரு..நான் வரேன்..அம்மா பத்திரம்! "...என்று சென்றாள். தொப்புள் கொடி உறவு என்று சொல்வதெல்லாம் சொல்லிவிட்டு கிளம்பி விட்ட; மகளால் எந்த உதவியும் கிடைக்கப்போவதில்லை, என நினைத்து மருகினார் சிவமூர்த்தி!
"வாசு.."மகனை அழைத்தார் சிவமூர்த்தி, அவன் அருகில் வந்ததும் "டேய்..நான் கண்ணப்பனை போய் பார்த்துட்டு வந்துடறேன்: நீயும் வரியா?"என்றார்.
"எதுகுப்பா"

"உங்க அம்மாவை காப்பாத்த வேறு வழி தெரிலப்பா!
உன் கல்யாணத்துக்கு வீட்டு பத்திரத்த வச்சி அவர் கிட்ட தான் இரண்டு லட்சம் கடன் வாங்கியிருந்தேன் கூடவே கடன் கேட்டுப் பார்ப்பமே!" என தயக்கத்தோடு சொன்னார்.

இவர் சொன்னதைக்கேட்டுக் கொண்டே அருகில் வந்தால் மருமகள் நந்தினி!" இவர் வாங்குற சம்பளத்துல தான் அந்த இரண்டு லட்சத்திக்கு வட்டி கட்டிகிட்டு இருக்காரு,மேற்கொண்டு பணம் வாங்கினா அதுக்கு யார் வட்டி கட்டுறது?!" கணவன் வாசுவை முறைதவள், "இந்தாங்க..பையனுக்கு யூனி∴பார்ம் தைசுட்டாங்களாம்; போய் வாங்கிட்டு வந்துடுங்க! சீக்கிரம்...நேரமாகுது..!போங்க!.." என அவசரபடுத்தினாள். அவனும் வெளியே சென்றான்.

சிவமூர்த்தியிடம் சிறு புன்னகை விரக்தியோடு வெளிப்பட்டது!
"இனி, என்ன செய்வது?".... துண்டை தோளில் போட்டு தளர்வாக நடந்தார்.
இது எதையும் காதில் வாங்காமல் அமைதியாய் தூங்கிக் ஓய்வெடுத்துக்கொண்டிருந்தார் சிவமூர்த்தியின் நோயாளி மனைவி!

கோவில்...
அம்மன் சிறப்பான அலங்காரத்துடன் தரிசனம் தந்தாள்.
தூண் ஓரமாக உட்கார்ந்தவர், கண்ணீர் மல்க அம்மனிடம் கையேந்தினார். "தாயே! தன் குடும்பங்களும் பிள்ளைகளும் நல்லா இருக்கணும்னு அவ உன்ன வேண்டாத நாளே இல்ல! இன்னிக்கு... வாழப்போற நாட்களை எண்ணிக்கிட்டு இருக்கா!... யார் வந்து உதவ போறாங்க ! எனக்கு எந்த நம்பிக்கையும் இல்லை உன்னத் தவிர! உன்ன மட்டும்தான் நம்புறேன்; அவள வாழவைக்கிறதோ வழி அனுப்பி



வைக்கிறதோ... உன் கையில்: எல்லாம் உன் செயல்" கண்களில் வழிந்த நீரை துடைத்துக்கொண்டு வீடு நோக்கி நடந்தார்!
இரண்டு நாட்கள் நடந்ததெல்லாம் நெஞ்சில் நிழலாடியது! பணம்தான் உறவுகளையும் நட்புகளையும் அடையாளம் காட்டுதோ?..

"தொலைந்து போகும் தொப்புள்கொடி உறவுகள்; விலகிப் போகும் சொந்தங்கள்; காணாமல் போகும் நட்பு எல்லாமே காதறுந்த ஊசி மாதிரிதான்; எதுக்கும் பயன்படாது; குத்திக்காட்ட தான் உதவும்!" என்னும் பாடத்தை அறுபதை தாண்டிய வயதில் உணர்ந்தார் சிவமூர்த்தி!...

ஒரு மாதம் கடந்த நிலையில், தொலைதூர கிராமத்திலிருந்து ஒரு பெரியவர் வந்தார். சிவமூர்த்தி மனைவி பிறந்த ஊர்காரர் அவர்.
தாய், தந்தை, உடன் பிறந்தோர் அனைவரையும் இழந்து, சிவமூர்த்தியை சிறுவயதிலே திருமணம் செய்து கொண்டு வந்துவிட்டவளுக்கு தாய் வழியாக சொத்து ஒன்று அந்த ஊரில் இருந்துள்ளது. அது கிரையம் செய்யும் வகையில் ஒருவர் பத்து லட்ச ரூபாயோடு காத்திருப்பதை அந்தப் பெரியவர் சொல்ல...
"தாயே !"என்று கோவிலில் பார்த்த அம்மனை மனதார வணங்கினார் சிவமூர்த்தி!

சுற்றமும் நட்பும் காதறுந்த ஊசியாய் கவனிக்காமல் போனாலும் திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை நிற்கும் எங்கிற உண்மை அந்த தெய்வத்தாலேயே உணர்த்தப்படுகிறது.



ரா. பன்னீர்செல்வம்



# வேண்டியதைத் தந்தருளும் இருக்கன்குடி மாரியம்மன்!!

ஆடி மாதம் அம்மன் வழிபாட்டுக்குரிய மாதம் இருக்கிறது. இந்த மாதத்தில் ஏதாவது ஒரு மாரியம்மன் கோவிலுக்குச் சென்று மாரியம்மனை வழிபடுவது மிகவும் சிறப்பு.

ஒவ்வொரு ஊரிலும் சிறப்புப் பெற்ற அம்மன் கோயில்கள் அந்தந்த பகுதிக்குரிய சிறப்புகளுடன் அமைந்துள்ளன.

தமிழ் நாட்டில், விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அருகேயுள்ள இருக்கன்குடி என்ற சிற்றூரில் கங்கைக்கு நிகராகச் சொல்லப்படும் அர்ச்சுனா, வைப்பாறு என்னும் இரண்டு ஆறுகளுக்கு இடையில் ஒரு மாரியம்மன் கோவில் அமைந்துள்ளது. இக்கோயில் சுமார் 500 ஆண்டுகள் பழமையானது. இந்த இரண்டு ஆறுகளிலும் நீராடி, அம்மனை தரிசித்து வழிபடுவதால், நமக்கு வேண்டியதைத் தந்து, மகிழ்ச்சியான வாழ்க்கையைப் பெறலாம் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

ஆண்டு முழுவதும் செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் இந்த கோயிலுக்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து அம்மனை தரிசிக்கிறார்கள். குறிப்பாக ஆடி கடைசி வெள்ளிக்கிழமையன்று ஆடித்திருவிழா வெகு சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

ஸ்தல புராணம்:

பல ஆண்டுகளுக்கு முன்பு மேற்குத் தொடர்ச்சி மலையில் சிவயோகி ஞானசித்தர் என்ற ஒரு சித்தர் வசித்து வந்தார். பராசக்தியின் தீவிர பக்தரான அவர், ""நான் யோகநிஷ்டையாகும் இடத்தில் தாங்கள் சிவசொரூபியாக அமர்ந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்க வேண்டும்"" என்று பராசக்தியிடம் வரம் கேட்டார். வரமளித்த அன்னை, ""நீ யோகநிஷ்டையாகும் இடம் இரு நதிகள் சங்கமிக்கும் இடமாக இருக்க வேண்டும்"" என்று கூற, அதன்படியே அமைந்த இந்த இருக்கன்குடி என்ற இடத்திற்கு வந்து நிஷ்டையில் ஆழ்ந்தார் சித்தர்.

அம்மன் திருவாக்கு அருளியபடி சித்தருக்குக் காட்சி கொடுத்தார். தாம் தரிசித்த அம்மனின் உருவத்தை மற்றவர்களும் கண்டு தரிசித்து அவர்களுடைய வினைகள் யாவும் நீங்கி வளமோடு நலமோடும் வாழ வேண்டும் என்ற எண்ணத்தில்

அந்த இடத்தில் அம்மனை சிலையாக வடித்தார். சித்தர் வடித்த சிலையிலேயே அம்பாள் ஐக்கியமானாள். வெகுகாலம் கழித்து ஏற்பட்ட ஊழிப் பிரளயத்தில், இந்த சிலை, ஆற்று மண்ணில் புதைந்து போனது.

பிற்காலத்தில், ஒரு நாள் சாணம் பொறுக்குவதற்காக வந்த ஒரு இளம்பெண், அம்மன் புதைந்து போன இடத்தில் இருந்த சாணத்தை எடுத்து கூடையில் போட்டு அந்த சாணக் கூடையைத் தூக்க முயன்ற போது அவளால் கூடையைத் தூக்க முடியவில்லை. பின்பு அங்குள்ள பெரியவர்களை அழைத்து வந்தாள். அப்போது, அந்த இளம்பெண்ணின் மூலமாக மாரியம்மனின் அருள்வாக்கு வர, அவ்விடத்தில் தான் சிலை வடிவமாக இருப்பதாகவும். "தன்னை வெளியில் எடுத்து கோயில் அமைத்தால் உங்களுக்குக் காவலாக நான் இருப்பேன்"" என்று சொல்ல, மெய்சிலிர்த்த மக்கள் அந்த இடத்தை தோண்ட அம்மன் சிலை வெளிப்பட்டது. முதலில் கூரையாக வேய்ந்து அம்மனுக்குக் கோயில் கட்டினர். அக்கம் பக்கமெல்லாம் புகழ் பரவிப் பெருக, பல மாற்றங்கள் கண்டு, பிரமாண்ட ஆலயமாக உயர்ந்தது. அன்று சாணக்கூடை சுமந்த பெண்ணின் வழி வந்த குடும்பத்தினர்தான் இன்று கோயிலின் பரம்பரை அறங்காவலர், பூசாரி பதவிகளில் இருக்கிறார்கள்.

இரண்டு ஆறுகள் சங்கமிக்கும் இருக்கன்குடி:

அர்ஜுனா ஆறு, வைப்பாறு இவ்விரு ஆறுகளும் கங்கைக்கு ஒப்பானது என்பதால், இரு கங்கைக்கும் நடுவில் அமைந்த கோயில் என்பதை உணர்த்தும்விதமாக "இருகங்கைக்குடி' எனப்பட்ட இந்த ஊர் "இருக்க(ங்)ன்குடி' என மருவியது. இங்கு மாரியம்மன் அருள் புரிவதால் இந்த இடத்திற்கு இருக்கன்குடி மாரியம்மன் என்ற பெயர் ஏற்பட்டது. இங்குப் பக்தர்கள் இரண்டு தீர்த்தங்களிலும் நீராடி அம்பிகையை வழிபட்டு வருகிறார்கள்.

இந்த கோயிலின் ஸ்தல தீர்த்தமாக இவ்விரு ஆறுகளும் அமைந்துள்ளன.

அர்ச்சுனா ஆறு:

இந்த கோயிலுக்கு வடக்கே ஓடும் அர்ச்சுனா ஆறானது, வத்திராயிருப்பிலுள்ள மகாலிங்க மலையில் இருந்து உற்பத்தியாகிறது. இந்த அர்ச்சுனா ஆற்றுக்கு ஒரு புராணக் கதை உண்டு. முன்னொரு காலத்தில் பஞ்சபாண்டவர்கள் காடுகளில் சுற்றித் திரிந்து பின் இந்த மலையடிவாரத்தில் தங்கி ஓய்வு எடுத்தார்கள். களைப்பு தீரக் குளிக்க வேண்டும் என்று நினைத்தார்கள். இதனால் அங்கே நீர் நிலைகளைத் தேடிச் சுற்றிச் சுற்றி பார்த்தார் அர்ஜுனன். ஆனால் அவர் கண்களுக்கு எட்டும் தூரம்வரை நீர் நிலைகள் இருப்பதற்கான அறிகுறிகள் எதுவும் காணப்படவில்லை. இதனால் அர்ஜுனன், கங்காதேவியை நினைத்து வணங்கி ஒரு அம்பை மலையில் எய்தினார். உடனே அந்த இடத்தில் பீறிட்டு கிளம்பிய தண்ணீர் ஆறாக உருவெடுத்தது. அந்த ஆற்றில் பாண்டவர்கள் அனைவரும் நீராடினார்கள். அர்ஜுனன் இதனை உருவாக்கியதால் "அர்ச்சுனா ஆறு" என்று பெயர் பெற்றது

வைப்பாறு:

அம்மன் கோயிலுக்கு தெற்கே ஓடுவது வைப்பாறு ஆகும், இந்த வைப்பாற்றுக்கும் ஒரு தனி புராணக்கதை உண்டு. ஒரு சமயம் சம்புகன் என்ற வேடனால் அயோத்தியில் வாழ்ந்த ஒருவன் இறக்க நேரிட்டது. இதை அறிந்த ஸ்ரீராமர் வேடன் சம்புகனை கொன்றார். வேடனால் இறந்தவனை தன் சக்தியால் உயிர்ப்பித்தார் ஸ்ரீராமர் (இது ராமாயண உத்தரகாண்டத்தில் விளக்கப்பட்டுள்ளது) இறந்தவனுக்கு மீண்டும் உயிர் தந்தாலும், வேடன் சம்புகனை கொன்றதால் ஸ்ரீராமருக்கு பிரம்மஹத்திதோஷம் பிடித்தது. அந்த பாவ விமோசனத்திற்காகச் சிவபெருமானை நினைத்து, வணங்கித் தவம் செய்து பாவ விமோசனம் பெற்றார். அதன் பின் ராமன் தன் பரிவாரத்துடன் மேற்குத் தொடர்ச்சி மலைப் பக்கமாக வந்து சேர்ந்தபோது மாலைப் பொழுது ஆகிவிட, நீராடி, சிவவழிபாடு செய்ய வேண்டும் என்று எண்ணம் வெளிப்பட்டது. ஸ்ரீராமர், தண்ணீரைத் தேடினார். அப்போது ராமனுடன் வந்திருந்த சாம்பவன் என்பவர், உலகிலுள்ள புண்ணிய தீர்த்தங்கள் அனைத்தையும் ஒரே குடத்தில் நிரப்பி, அந்தக் குடத்தை அகத்தியர் இங்குப் புதைத்து வைத்திருப்பதாகக் கூறினார். இதைக்கேட்டு மகிழ்ந்த ராமன் தன் அம்பால் புதைத்து வைத்திருந்த குடத்தை உடைத்தார். இப்படி வைப்பி(புதையலில்)லிருந்து தோன்றிய ஆறுதான் வைப்பாறு எனப்பட்டது. இந்த வைப்பாறு கரிவலம் வந்த நல்லூர், சாத்தூர்,

கொல்லாம்பட்டி வழியாகப் பாய்ந்து இருக்கன்குடி அடைந்து, அங்கு ஏற்கெனவே ஓடிக்கொண்டிருக்கும் அர்ச்சுனா நதியுடன் கலந்து முத்துலாபுரம், விளாத்திகுளம் வழியாகச் சென்று கடலில் கலக்கிறது. இந்த இரு ஆறுகளும் கங்கை ஆற்றுக்கு இணையாக இருப்பதால் இந்த இடத்தில் அம்மன் வீற்றிருக்க விரும்பினார்.

## திருக்கோயில் அமைப்பு:

இருக்கன்குடி மாரியம்மன் திருக்கோயில் 10 அடி உயரமுள்ள கல் கோட்டைக்குள் அமைந்துள்ளது. இந்தக் கோயில் கிழக்கு மேற்காக 178 அடியும், வடக்கு தெற்காக 149 அடியும் கொண்ட இடத்தில் கட்டப்பட்டுள்ளது. கோயிலின் முன்பகுதியில் உள்ள அம்மனின் சிலை உருவம் சிறப்பாகக் காட்சியளிக்கிறது. உட்பிரகார கோபுரம் அழகிய வேலைப்பாடுகளுடன் தங்க நிறத்தில் காட்சி அளிக்கின்றது. இக்கோயிலில் உள்ள மாரியம்மன் சிவ அம்சமாகத் திகழ்வதால் அம்மன் சந்நிதிக்கு எதிரில் அமைந்துள்ள மகாமண்டபத்தில் நந்திகேஸ்வரரும் அதற்கு அடுத்தாற்போல் கொடிமரமும் அமைந்திருப்பது கோயிலின் தனிச் சிறப்பு. கருவறையில் நுழைவாசலில் உயரம் குறைவாக இருப்பதால் குனிந்து தான் உள்ளே செல்ல வேண்டும். மாரியம்மன் பொன்னாபரணங்கள் அணிந்து தங்க மேனி உடையவராகக் காட்சியளிக்கின்றார். அம்மனின் கருணை விழிகளைக் கண்டாலே மெய்சிலிர்க்க வைக்கும். இக்கோயிலில் அம்மன் வலது காலை மடித்து இடது காலை தொங்கவிட்டபடி சுகாசன கோலத்தில் அருள்பாலிக்கிறார் இந்த கோலத்தில் காட்சி தருவது மிகவும் விஷேசமாகும். கர்ப்பகிரகத்திற்கு முன்பு உள்ள அர்த்த மண்டபத்தில் அம்மனுக்கு வலதுபுறம் விநாயகர் அமர்ந்திருக்கிறார். அம்மன் சந்நிதியைச் சுற்றிலும் பரிவார தேவதைகளாக சந்நிதிக்கு பின்புறம் வடக்கு வாயில் செல்வி வெயிலுகந்தம்மன் உள்ளார், இவர்களுக்கு முன்பாக அரச மரத்தடியில் சித்தி விநாயகர் அமர்ந்து அருள்பாலித்து வருகின்றார். அருகே வாழவந்தம்மனும் அதற்கு மேற்கே ராக்காச்சி அம்மனும் இருக்கின்றனர். வடமேற்குப் பகுதியில் பேச்சியம்மனும், முப்பிடாரி அம்மனும் தனித்தனி சன்னதியில் இருந்து அருள்பாலிக்கிறார்கள். அதற்குக் கிழக்கே காத்தவராயனும், வயிரவமுர்த்தியும் எழுந்தருளியிருக்கின்றனர்.

தெற்கு பிரகார மண்டபத்தில் அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய மாவிளக்கு மண்டபத்தின் உள்ளே உட்புற சுவர்களில் இத்திருத்தலத்தின் ஸ்தல வரலாறும், அன்னை பராசக்தியின் பற்பல அவதாரங்களில் திரு உருவப் படங்களும் வண்ணக் கலவைகளால் உயிர்பெற்றுக் காட்சியளிக்கின்றன. மண்டபத்தின் மேற்கூரையில் அஷ்ட லட்சுமியின் திருவுருவப் படங்கள் வரையப்பட்டுள்ளன. கோட்டைச் சுவருக்கு வெளியே தென்கிழக்குப் பகுதியில் காவல் தெய்வமாகிய கருப்பசாமிக்குச் சன்னதி அமைந்துள்ளது திருக் கோயிலின் தென்கிழக்கு பகுதியில் வடக்குப் பார்த்தவாறு கையிருப்பு மஞ்சள் நீராட்டு அம்மன் கோவில் உள்ளது.

## ஆதி அம்பிகை:

கோயில் இப்போது இருக்கும் இடத்துக்குச் சற்றுத் தொலைவில் அம்மன் சிறுமிக்குக் காட்சி கொடுத்த இடத்தில் ஆதி அம்பிகை சந்நிதி உள்ளது. இந்த இடத்தையும், "அம்மன் பிறந்த இடம்" என்று வழிபடுகிறார்கள்
இங்கே அம்மனின் திருவுருவத்துக்குப் பதில், அம்மன் உருவம் பொறித்த சூலம் மட்டும் வைக்கப்பட்டுள்ளது. உற்சவ அம்மன் ஊருக்குள் இருக்கிறது. ஒவ்வொரு ஆடிமாதமும் கடைசி வெள்ளியன்று அந்த சிலை ஊரில் உள்ள கோயிலில் இருந்து எழுந்தருளி, மூலவர் உள்ள இடத்திற்கு வந்து தங்கவைக்கப்படுகிறது. மறுநாள் இங்கிருந்து புறப்பட்டு ஊருக்குள் உள்ள உற்சவர் கோயிலை அடைகிறது.

## ஸ்தலச் சிறப்பு :

வேண்டியதைத் தந்தருளும் பிரதான பிரார்த்தனைத் ஸ்தலம் இது. கண் நோய் உள்ளவர்கள், "வயனம் இருத்தல்" என்ற விரதத்தை அனுசரிக்கின்றனர். ஒரு சிலர் நோய் தீரும் வரை இங்கேயே இருந்து விடுகின்றனர். சிலர் ஒரு குறிப்பிட்ட நாளில் வந்து தங்கிவிட்டு மறுநாள் செல்கின்றனர். இவர்கள் தங்குவதற்குக் கோயிலில் மண்டபம் உள்ளது. இவர்கள் அம்மனின் அபிஷேக தீர்த்தத்தைக் கண்ணில் விட்டுக்கொள்ள, நோயில் இருந்து நிவாரணம் கிடைப்பதாகப் பக்தர்கள் நம்பிக்கையுடன் கூறுகின்றனர். விவசாயிகள் இந்த அபிஷேக தீர்த்தத்தை நிலத்தில் தெளிக்கின்றனர். அறுவடையானதும் அம்பிகைக்கு நவதானியம், நெல், காய்கறி காணிக்கை கொடுக்கின்றனர்.

கால்நடைகள் நோயின்றி இருக்கவும் இத்தீர்த்தம் கொடுப்பதுண்டு. அம்மை நோய் உள்ளவர்கள், அம்பிகைக்கு ஆமணக்கு விதையைக் காணிக்கையாக்கி வழிபடுகின்றனர். உடல் குறைபாடுள்ளவர்கள் உருவம் செய்து வைத்து வழிபடுகின்றனர். குழந்தை இல்லாத தம்பதிகளுக்குக் குழந்தை வரம் அளித்தும், திருமண பாக்கியம் வேண்டியோருக்கு மாங்கல்ய வரம் அளித்தும் அருளாட்சி செய்யும் அம்மனை தரிசித்தால் நிச்சயம் அருள் கிட்டும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

### நேர்த்திக்கடன்:

தங்களது கோரிக்கை நிறைவேறியவுடன் அம்பாளுக்குத் திருமுழுக்காட்டு எனும் சிறப்பு ஆராதனை செய்து நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர். இதைத்தவிர அம்மனுக்குப் புடவை சாத்துதல், பூஜை செய்தல் போன்ற வழக்கமான வழிபாடுகளில் ஈடுபடுகின்றனர். கூழ் வார்த்தும், பக்தர்கள் பொங்கல் வைத்தும், அக்கினிச்சட்டி எடுத்தும், முடிக்காணிக்கை செலுத்தியும், மாவிளக்கு ஏந்தியும் நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர். ஆயிரங்கண் பானை எடுத்து வலம் வருதல், அங்கப்பிரதட்சிணம் செய்தல் போன்ற வேண்டுதல்களை நிறைவேற்றுகின்றனர். மற்றும் அலகு குத்தியும், முளைப்பாரி எடுத்து வந்தும் நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர்.

### கரும்புத் தொட்டில்:

குழந்தைப் பேறு இல்லாதவர்கள் இருக்கன்குடி அம்மனிடம், குழந்தை பிறந்தால் கரும்பு தொட்டில் கட்டுவதாக வேண்டுகின்றனர். அவர்களுக்கு நிச்சயம் குழந்தை பாக்கியம் கிடைக்கிறது. குழந்தை பிறந்ததும் கரும்பில் தொட்டில் செய்து, அதில் குழந்தையைப் படுக்க வைத்து அம்மனின் சந்நிதியை வலம்வந்து தங்களுடைய நேர்த்திக்கடனை நிறைவேற்றுகிறார்கள்.

### கோயில் திருவிழாக்கள்:

இந்த கோவிலில் தமிழ் மாதங்களான ஆடி, தை, பங்குனி மாதங்களில் செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் தென் மாவட்டங்களின் பல ஊர்களிலிருந்தும் அதிகமான மக்கள் வருவதால் இந்த நாட்களில் மாரியம்மனுக்குச் சிறப்பு வழிபாடுகள் செய்யப்படுகின்றன. இருக்கன்குடி அம்மனுக்கு ஆடி கடைசி வெள்ளி திருவிழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. அன்று உற்சவர் கோயிலில் இருந்து ரிஷப வாகனத்தில் எழுந்தருளி, அர்ச்சுனா நதியில் உலாவி திருக்கோயிலில் எழுந்தருள்கிறார். இதேபோல தை கடைசி வெள்ளியிலும், பங்குனி கடைசி வெள்ளியிலும் பெருந்திரளான மக்கள் அம்மன் அருள் பெறக் கூடுவது கண்கொள்ளாக் காட்சி ஆகும். விழாக்காலங்களில் அம்மன் அருள் பெற அர்ச்சுனா நதியிலும், வைப்பாறு நதியிலும் மக்கள் வெள்ளம் கூடும். இந்த விழாவில் சுற்றுவட்டார மாவட்டங்களில் இருந்து மட்டுமல்லாது, மாநிலம் முழுவதும் இருந்து லட்சக்கணக்கில் பக்தர்கள் கூடி இருக்கன்குடி அம்மனை தரிசித்து அருள் பெறுகிறார்கள்.

### கோயில் திறந்திருக்கும் நேரம்:

கோயில் காலை 5.30 மணி முதல் 1.00 மணி வரையிலும், மாலை 4.30 மணி முதல் இரவு 8 வரையிலும் திறந்திருக்கும். செவ்வாய், வெள்ளி, ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 5.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை தொடர்ந்து திறந்திருக்கும்.

### கோயிலுக்குச் செல்லும் வழி:

விருதுநகரிலிருந்து 32 கி.மீ, சாத்தூரிலிருந்து 8 கி.மீ தொலைவில் திருச்செந்தூர் செல்லும் வழியில் உள்ளது இருக்கன்குடி. இந்த ஊருக்கு சாத்தூரிலிருந்து பேருந்து வசதி உள்ளது.

இரயில் பயணத்தில் மதுரையிலிருந்து தூத்துக்குடி, திருநெல்வேலி, நாகர்கோயில் செல்லும் வழியில் இருக்கும் சாத்தூர், விருதுநகர் போன்ற ஊர்களுக்குச் சென்று அங்கிருந்து பேருந்து மூலமாக இருக்கன்குடிக்குச் செல்லலாம்.

### “ஸ்ரீ மாரியம்மன் தியான ஸ்லோகம்”

”அக்நிஜ்வாலாசிகாம் அக்னிநேத்ராம் அக்னிஸ்வரூபிணீம் கரந்த மகுடோபேதாம் கதா டக்கா கராம்புஜாம்’ வீராஸநாம் கபாலாஸி பாச ஹஸ்தாம் ரவிப்ரபாம் வந்தே தேவீம் மஹாமாரீம் நாகாபரணபூஷிதாம்.”

“ஸ்ரீ மாரியம்மன் காயத்ரி மந்திரம்”
ஓம் பிசாசத்வஜாய வித்மஹே!!
கட்க ஹஸ்தாய தீமஹி!!
தந்நோ மாரீ: ப்ரசோதயாத்!

வேண்டியதைத் தந்தருளும் இருக்கன்குடி



மாரியம்மனை மனதால் நினைத்தாலே நினைத்த காரியங்கள் நிறைவேறும்.

ஓம் சக்தி ..!! பராசக்தி...!!!



திருவாரூர் சு.சேகர்

# ஆன்மீக கேள்விகளும் அர்த்தமுள்ள பதில்களும்



ஆரூர். ஆர். சுப்பிரமணியன்

### ‘அபங்கள்“ என்றால்?

மகாராஷ்டிர தேசத்தில் சிவாஜி மன்னராக விளங்கிய காலத்தைச் சேர்ந்த துக்காராம், பண்டரிநாதன் மீது அபார பக்தி கொண்டிருந்தார். அவர் பெருமாள் குறித்து இசையுடன் இயற்றிய பக்திப் பாடல்களுக்குத்தான் “அபங்கள்“ என்று பெயர்.

### சிலர் காலையில் கண் விழித்ததும் தம் உள்ளங்கையை பார்க்கிறார்களே ஏன்?

யாவருமே செய்ய வேண்டிய ஒன்றுதான் இது.
கண் விழித்தவுடன் காலையில் தன் கண்களை தெளிவாக துடைத்து விட்டு, தன்னுடைய உள்ளங்கையைப் பார்க்க வேண்டும். ஏனென்றால் கைகளின் நுனிப்புறம் மகா லெட்சுமியும், நடுப்புறம் கலைமகளும், அடிப்புறம் கௌரி தேவியும் வாசம் புரிவதாக ஐதீகம்.

### புகழ்பெற்ற உஜ்ஜைனி கொண்ட வேறு பெயர்கள் என்னென்ன?

அவந்திகா, பத்மாவதி, குஷாஸ்தவி, பகவதி, ஹிரண்யவதி, கண்ட காத்ரிங்கா, குமுதவதி, ப்ரதிகல்பா, விஷாவா என்பன.
சப்தபுரிகளில் இவ்வூர் ஒன்றென இந்த சுலோகம் சுட்டும்.
”அயோத்யா, மதுரா, மாயா, காசி, காஞ்சி, அவந்திகாபுரி த்வாராவதி, சைவ சப்தே தாமோக்ஷ தாயிகா”
இந்த ஏழு தலங்களும் முக்தி தரும் தலங்கள்.
உஜ்ஜைனியின் அழகைப் போற்றி, ”மேகதூதம்” என்ற தன் காவியத்தில் அனேக சுலோகங்களில் பாடி மகிழ்ந்துள்ளார் மகாகவி காளிதாஸ்.

### ஸ்நானங்கள் எத்தனை வகையானவை?

ஸ்நானங்களில் அனேக வகைகள் உள்ளன. முக்கியமான சில ஸ்நானங்கள் இவை:
தனது உடல் முழுமையும் உத்தூளணமாக வீபூதியை பூசும் “ஆக்னேயம்“.
தர்ப்பமெடுத்து மந்திர ஜலத்தை ப்ரோஷணம் செய்து தெளித்துக் கொள்ளும் ‘ப்ராமம்“.
பசுக்கள் நடந்து செல்கையில் வீதிப்புழுதி கிடைக்க அதில் ஸ்நானிப்பது “வாயவ்யம்“.
சில சமயங்களில் மழை பெய்கையில் வித்தியாசமாக வெயிலும் அடிக்கும். தேவலோக தீர்த்தங்களில் நீராடிய புண்ணியம் தரும் ‘திவ்யம்“.
தண்ணீரில் சுத்தமான துணியை நனைத்துவிட்டு தன் தலை தொடங்கி பாதம் முடிய துடைத்துக் கொள்ளும் ‘காபிலாம்“.
ஆறாவதாக இருந்த இடத்திலேயே இறைவனை மனதால் துதிக்கும் பாவனையாக “மானசம்“ என்ற வகை கொண்ட அறுவகை ஸ்நானங்கள்.

### சித்தர்கள் கொண்ட சிறப்பு ஆற்றல்கள் எவை?

பிருங்கி முனிவர் வண்டின் உருவெடுத்தார் - எந்த பெரிய வகைப் பொருளையும் சிறிதாக்கும் இச்சித்தை “அனிமா“ என்பார்கள்.

மனித உருவில் இருந்த கிருஷ்ணன் மகாபாரதத்தில் விஸ்வரூபமெடுத்த காட்சி வகைகள் "மகிமா" வகையில் அடங்கும். இங்கே சிறிய பொருள், பெரிதாக ஆனது.

"லகிமா" என்ற ஆற்றல் மூலம் கனமானதை லேசாக மாற்ற முடியும்; இம்முறையில் அப்பரடிகள் பிணைக்கப்பட்டிருந்த கல் தெப்பமாக மாறிவிட்டது.

63 நாயன்மார்களில் ஒருவரான அமர்நீதி நாயனார், லேசான பொருளை கனமாகும் ஆற்றலைப் பயன்படுத்த, தராசு தட்டில் வைக்கப்பட்ட சிவபிரானின் கோவணம் கனமுள்ளதாகி விட்டது. இந்த ஆற்றல் "கரிமா" ஆகும்.

"பிரார்த்தி" என்பது உலகெங்கும் சஞ்சரிக்கும் திறன் கொண்டது. போகர் அயல்நாடுகளுக்கு பறந்து சென்றது எவரும் அறிந்ததே.

மூலன் என்ற மாடு மேய்ப்பவனின் செத்த உடலில் சிவயோகி கூடுவிட்டு கூடு பாய்ந்து அவர் திருமூலர் ஆன வகை "பிரகாமியம்" என அழைக்கப்படும்.

கோரக்கர் சித்தர் தான் பெற்ற "ஈசத்துவம்" என்ற சித்து மூலம் பலதுண்டுகளாக சிதறிக் கிடந்த மீனநாதன் என்பவனின் உடலை ஒன்று சேர்த்து உயிரளித்தார்.

"வசித்துவம்" என்ற ஆற்றல் கொண்டு எவரையும், எதனையும் தன் வயப்படுத்தி விரும்பியவாறு நடக்கச் செய்யலாம். இம்முறை கொண்டு அப்பர் சுவாமிகள் தன்னை தாக்க வந்த ஒரு யானையை பின் வாங்கச் செய்தார்.

இவை தவிரவும் சித்தர்கள் பல பேராற்றல்களைக் கொண்டிருந்தனர்.

## சித்தர்கள் கொண்ட நான்கு வகை முக்திகள் என்னென்ன?

சாருலோகம், சாமீபம், சாரூபம் என்ற பதமுத்தி வகையுடன் சாயுச்சியமென்ற முத்தி நிலையும் கொண்டவர்கள் சித்தவர்கள்.

## திருவாசக நூல் குறித்து, வள்ளல் இராமலிங்க அடிகளார் போற்றிப் பாடிய, பாடல் எது?

'வான் கலந்த மாணிக்க வாசகரின் வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பச் சாற்றினிலே
தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித்தீஞ் சுவை கலந்தென்
ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பது வே"

## கோட்டைத் திரடு கோயில் எங்குள்ளது?

நெல்லை மாவட்ட செங்கோட்டையிலிருந்து அச்சன் கோயில் செல்லும் சாலையில் உள்ள பண்மொழில் ஊரிலிருந்து சுமார் மூன்று கி.மீ தூரத்தில் கோட்டை திரடு என்ற ஊரில் ஆலயம் அமைந்துள்ளது.

முருகப் பெருமான், பக்தர்கள் கனவில் தோன்றி தான் புதரில் மறைந்து கிடப்பதாக அறிவித்தபடி, அவர் அங்கே கிடைத்தார். அதன் பிறகு அவர்கள் கந்தவேளுக்கு மலைமீது ஆதி உத்தண்ட நிலையம் சமீபமாக அழகான திருக்கோயிலை உருவாக்கினார்கள். பந்தள அரசர்களின் ஒத்துழைப்பு இதில் அதிகம் என்பதால் திருக்கோயில் மற்றும் நடைமுறைகள் கேரள பாணியில் இருக்கும். அகத்திய தமிழ் முனிவர் இத்தலம் வந்து முருகவேளை தரிசித்து மகிழ்ந்துள்ளார். அவர் இங்கு அமைத்த நீர் சீனையின் பெயர் 'அஷ்ட பத்மக்குளம்" என்பது. இந்த சுனையில் தினமும் ஒரு குவளைப்பூ மலரும் என்றும் அதை சப்த கன்னியர்கள் அங்குள்ள முருகனுக்கு அர்ப்பணிப்பது வழக்கம் என்றும் கூறப்படுகிறது.

## அனுமனை வரப்ரசாதி என்கிறார்களே?

"வரப்ரசாதி" அனுமாருக்கு காரணப் பெயராகக் கூட கொள்ளலாம். தன்னை வேண்டும் பக்தர்களுக்கு அனைத்து வரங்களையும் அருளும் கருணை பூண்ட இந்த அவதாரம் எத்தனை வரங்களைப் பெற்றுள்ளார் தெரியுமா?

தன் தந்தை சூரியனிடமிருந்து ஒளியின் ஒரு பகுதியைப் பெற்றதோடு அல்லாமல் அவரிடமிருந்தே சகல கலைகள், சாஸ்திரங்களை கற்கும் வரம் பெற்றார் ஆஞ்சநேயன்.

மரணம், முதுமை அண்டாத வரத்தை இவருக்கு அளித்து சிரஞ்சீவியாக்கியது யமதர்மராஜா. (சீதா பிராட்டியும் அனுமனை சிரஞ்சீவியாக வாழ ஆசீர்வதித்துள்ளார்)

தேவச் சிற்பி விஸ்வகர்மா தனது குண்டலங்களை வாயு புத்திரனுக்கு அளித்து ஆசீர்வதித்தார்.

இந்த சொல்லின் செல்வனுக்கு தோல்வியே ஏற்படாத விஜயசக்தி வரத்தை அருளினார் குபேரன்.

என்றுமே தன்னை பிரம்மாஸ்திரம் கட்டுப்படுத்தாத வரத்தை, படைக்கும் பிரம்மன் தந்தான் மாருதிக்கு.

இதேபோல அவருக்கு, தனது இந்திராஸ்திரத்தை எவர் ஆஞ்சநேயர் மீது ஏவினாலும் அதன் செயல் இழக்கும் என்ற வரத்தை கொடுத்தான் தேவேந்திரன்.

வருணன் அனுமனுக்கு அளித்த வரம் மூலம், நீரினால் வரும் அபாயமில்லாது போயிற்று.

எல்லாவற்றுக்கும் மேலாக பகவானுக்கு இணையான விஸ்வரூபம் எடுக்கும் அரிய வரத்தையும் இந்த இராமபக்தன் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.



விஜய்

ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர்


# ஆகஸ்ட் மாத பலன்கள் 2022






## மேஷ ராசி

மேஷ ராசி நேயர்களே, உங்கள் திறமைகளை வெளிப்படுத்தும் மாதமாகும் உங்கள் தகுதிகள் உயர்வதின் மூலம் புகழ் சேரும் செல்வம் கூடும் மாதமாகும். புதிய வாய்ப்புகள் உங்களைத் தேடி வரும். வாய்ப்பை பயன்படுத்தி கொள்ளுங்கள். ரத்த சம்பந்தமான உறவினர்களிடம் விட்டுக்கொடுத்துச் செல்லவேண்டும். சொத்துக்களை பிரிக்க பாகப்பிரிவினை போன்றவற்றை ஒத்திப் போடுவது நலம். வீடு சொத்து விற்பனைக்கு உகந்த காலமாகும். வாகனம் ஓட்டி செல்லும்போது கவனம் தேவை. திருமணம் கைகூடும். வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். செலவுகள் குறையும். உடல்நலம் சீராக இருக்கும். தொழிலில் பிடிவாதம் கூடாது. விட்டுக் கொடுப்பதன் மூலம் முன்னேற்றம் காண முடியும்.



## ரிஷப ராசி

ரிஷப ராசி நேயர்களே ,வருமானம் அதிகரிக்கும் மாதமாகும் உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்கும் சேமிப்பு உயரும் குடும்ப நபர்களின் தேவையை பூர்த்தி செய்வீர்கள் வீட்டுக்கு தேவையான புதிய பொருட்களை வாங்குவீர்கள். தைரியம் கூடும் தன்னம்பிக்கை அதிகரிக்கும். இளைய சகோதரருக்கு புகழ் கிடைக்கும். தாயாரின் உடல் நிலையில் முன்னேற்றம் இருக்கும். வீடு வாகனம் போன்றவற்றின் திட்டங்கள் மாறிப்போக வாய்ப்பு உண்டு. எடுக்கும் முடிவில் தீர்க்கமாக நிற்கவும் வெற்றி காணவும் ஆஞ்சநேயர் வழிபாடு உறுதுணையாக இருக்கும். திருமணம் கைகூடும், திருமணம் சார்ந்த அனைத்து முயற்சிகளும் செய்யலாம். குழந்தைகள் கல்வியில் தடை ஏற்படலாம், கவனம். பூர்விக சார்ந்த செயல்களில் ஈடுபடக்கூடாது. நீண்ட தூர பிரயாணங்கள் பாதிப்பைத் தரலாம், கவனம். லாபங்கள் கிடைக்கும். மனம் சார்ந்த பாதிப்புகள் குறைய அம்மன் வழிபாடு செய்து வரவும்.




## மிதுன ராசி

மிதுன ராசி நேயர்களே, புகழ் கிடைக்கும், போட்டி பந்தயங்களில் வெற்றி பெறுவீர்கள். சூதாட்டங்களில் ஈடுபட வாய்ப்புகள் தேடி வரும். திட்டங்கள் மாறிப் போகலாம் பயணங்களில் மாற்றம் ஏற்படலாம் புதிய முயற்சிகளுக்காக சேமிப்புகளை பயன்படுத்தலாம். வாகனங்களால் விரயம் ஏற்படலாம் வீடு சொத்து போன்ற செயல்களில் ஈடுபடாமல் இருப்பது பாதிப்புகளை குறைக்கும். குழந்தைகள் கல்வியில் மேன்மையடைவார்கள். இளைஞர்கள் காதலில் ஈடுபட வாய்ப்புகள் தேடி வரும். மனம் அலைபாயும் தெளிவான இருக்காது. தியானம் செய்வதன் மூலம் மனம் தெளிவடையும். திருமணம் தடைகள் நீங்கும். திடீர் லாபங்கள் கிடைக்கும். தொழில் முன்னேற்றம் கிடைக்கும். வேலையில் சம்பள உயர்வு மற்றும் பதவி உயர்வு கிடைக்கும் நீண்ட தூர பயணங்களை தவிர்ப்பது விரயங்களை குறைக்கும். வெளியூர், வெளிநாட்டில் வசிப்பவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும் மாதமாகும்.



## கடக ராசி

கடக ராசி நேயர்களே கற்பனைகள் அதிகரிக்கும். கனவுலகில் வாழும் சூழ்நிலை உருவாகும். வாழ்க்கைத்துணை பிடிவாதமாக இருப்பார். விட்டுக்கொடுத்து செல்வது குடும்ப வாழ்வில் மகிழ்ச்சியை தரும். சுய தொழிலில் பெரிய லாபம் கிடைக்கும். கடின உழைப்பால் புகழ் கிடைக்கும். பொருளாதார நிலை உயரும். கூட்டுத் தொழிலில் ஈடுபடக்கூடாது கூட்டாளிகளிடம் கவனமாக இருக்க வேண்டும். திருமணத் தடைகள் ஏற்படும், விடா முயற்சி வெற்றியை தரும். காதல் தோல்வி ஏற்படும். வேலையில் சுமை அதிகரிக்கும். உயர் அதிகாரிகளிடம் அனுசரித்து செல்ல வேண்டும். விருந்து, விழாக்களில் ஈடுபடுவீர்கள். கேளிக்கை செலவுகள் ஆனந்தத்தை தரும். புதிய முயற்சிகளை தவிர்த்து அன்றாட வேலைகளில் ஈடுபடுவது பாதிப்புகளை தவிர்க்கும். சிவ வழிபாடு மேன்மையைத் தரும்.



## சிம்ம ராசி

சிம்ம ராசி நேயர்களே வெளிநாடு, வெளி மாநிலங்கள் செல்ல வாய்ப்பு கிடைக்கும். லாபமும், விரயமும் சமமாக இருக்கும். செலவு செலவுகள் திட்டமிடுவது லாபங்களை சேமிக்க உதவும். உடல்நிலையில் கவனம் தேவை, இருதயம் சார்ந்த பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உண்டு. கடன், வழக்கு போன்ற திடீர் பாதிப்புகள் ஏற்படலாம்.அனைத்து செயல்களிலும் கவனமாக இருப்பது நலம். கல்வியில் நல்ல முன்னேற்றம் கிடைக்கும். வடக்கு திசை அனைத்து செயல்களுக்கும் உகந்ததாக அமையும்.தொழிலில் லாபம் கிடைக்கும். வேலையில் முன்னேற்றம் கிடைக்கும். தடைகள் நீங்கும் எதிரிகள் விலகிச் செல்வர். திருமணம் தாமதமாகும். அடுத்தவர்களை நம்பி முதலீடு செய்யக்கூடாது.



## கன்னி ராசி


கன்னி ராசி நேயர்களே, பயணங்கள் அதிகரிக்கும் பயணங்களால் உடல் நிலை பாதிக்கப்படலாம். வயது சார்ந்த பிரச்சனைகள் தோன்றும். மருத்துவமனை செலவுகள் தோன்றும். ஆன்மீக ஈடுபாடுகள் பாதிப்பை தவிர்த்து நன்மையைத் தரும். வெளியூர்களில் வசிப்பவர்களுக்கு எந்த தீமையும் ஏற்படாது, மாறாக முன்னேற்றம் கிடைக்கும். தொழில் வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி ஏற்படும். திடீர் அதிர்ஷ்டங்கள் ஏற்படும். குடும்பத்தில் கடன் அதிகரிக்கும், குடும்ப உறுப்பினர்களிடம் வாக்குவாதம் தவிர்க்க வேண்டும். திருமண தடை நீங்கும்,வாழ்க்கை துணை அமையும். முன்னோர்கள் வழிபாடு முன்னேற்றத்தை தரும். சுய தொழிலில் முதலீடு செய்யக்கூடாது.
வேலைக்கு செல்வது நலம்.






## துலாம் ராசி

துலாம் ராசி நேயர்களே, அனைத்து விதமான நன்மைகளும் நடக்கும் மாதமாகும். லாபங்கள் அதிகரிக்கும் ,வெற்றிகள் கிடைக்கும், விருப்பங்கள் நிறைவேறும். திருமணம் கைகூடும், குடும்பத்தில் மகிழ்ச்சி இருக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் அடைவார்கள். நீண்டதூரப் பயணங்களால் லாபம் கிடைக்கும் ஆன்மீக யாத்திரை மன நிம்மதி தரும். கடன் வழக்கு போன்ற பாதிப்புகளில் இருந்து வெளிவர முடியும். உடல்நலம் சீராக இருக்கும் முன்னோர்களின் ஆசீர்வாதம் கிடைக்கும். தொழிலில் புதிய கிளைகள் துவங்க முடியும். நண்பர்கள் உதவிகரமாக இருப்பார்கள். விநாயகர் வழிபாடு தடைகளை நீக்கி முன்னேற்றத்தை தரும்.



## விருச்சிக ராசி

விருச்சிக ராசி நேயர்களே, எல்லா திறமைகளும் இருந்தாலும் வெளிப்படுத்த முடியாமல் இருக்கும் சூழ்நிலை உருவாகும். நீங்களாக சென்று பிரச்சனையில் மாட்டிக் கொள்வீர்கள். ஆகையால், பிறர் பிரச்சனைகளில் தலையிடாமல் இருப்பது நலம். உடல்நிலையில் கவனம் தேவை, தலை சார்ந்த பிரச்சனைகள் ஏற்படலாம். ரத்தப் பரிசோதனை செய்து கொள்வது நலம். கடன் வழக்கு போன்ற பிரச்சனைகள் வரலாம். வாகனங்களில் செல்லும்போது கவனமாக இருக்க வேண்டும். குருபகவான் வழிபாடு அனைத்து பாதிப்புகளில் இருந்து வெளிவர உதவும். குழந்தைகளால் மன மகிழ்ச்சி ஏற்படும், புகழ் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவார்கள். வாழ்க்கைத்துணையை அனுசரித்துச் செல்வது அவமானங்களை தவிர்க்கும்.



## தனுசு ராசி

தனுசு ராசி நேயர்களே, வீடு வாகனம் சொத்து போன்றவைகளால் நன்மை நடக்கும். வருமானம் அதிகரிக்கும் சேமிப்பு உயரும். குடும்பத்தில் மகிழ்ச்சி இருக்கும்.

குலதெய்வ வழிபாடு செய்வது மற்றும் வேண்டுதல்களை நிறைவேற்றுவது மிகுந்த நன்மை தரும். திருமணத் தடை நீங்கும். வாழ்க்கைத்துணையுடன் சுற்றுலா செல்வீர்கள் குழந்தை பாக்கியம் கிடைக்கும் மாணவர்கள் கல்வியில் உயர்வடைவார்கள் உயர் கல்வியில் நல்ல முன்னேற்றம் கிடைக்கும் வெளிநாட்டு கல்விக்கு வாய்ப்பு உண்டு தொழில் வளர்ச்சி ஏற்படும் வேலையில் உயர் பதவி கிடைக்கும் அனைத்து பாதிப்புகளையும் குறையும் மாதமாகும்.



## மகர ராசி


மகர ராசி நேயர்களே, எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய மாதமாகும். திடீர் செலவுகள் ஏற்படும். குழந்தைகளுக்கு உடல் நல பாதிப்புகள் ஏற்படும். செலவுகள் அதிகரிக்கும். கடன் பெறும் சூழ்நிலை உருவாகும். வாழ்க்கைத்துணையுடன் சண்டைகள் ஏற்படும். ஒற்றுமை குறையும். மனம் மிகுந்த பாதிப்புகள் உண்டாகும். ஆகவே அனைவரையும் அனுசரித்து விட்டுக்கொடுத்து செல்வது பிரிவினையை தவிர்க்கவும் மன நிம்மதி கிடைக்கவும் உதவும்.

ஆகையால் அனைவரிடத்திலும் இடைவெளி விட்டு பழகுவது நன்மை தரும். வாகனம் ஓட்டும்போது கவனமாக இருப்பது விபத்துக்களை தவிர்க்கும். குடும்பத்தில் அவமானங்களை சந்திக்கும் சூழ்நிலை உருவாகும். தொழிலில் நஷ்டம் ஏற்படும். பயணங்கள், மாற்றங்கள் நன்மை தராது. ஆசையால் புதிய முயற்சிகளைத் தவிர்த்து, அன்றாட வேலைகளை செய்து வருவது நலம்.



## கும்ப ராசி

கும்ப ராசி நேயர்களே, தடைகள் அதிகரிக்கும். அனைத்து செயல்களும் தாமதமடையும். ஆகையால் முழு முயற்சியுடன் தொடர்ந்து ஒரு செயலில் ஈடுபட்டால் வெற்றி கிடைக்கும். தெளிவான முடிவு எடுக்க முடியாது, ஆகையால் பெரியவர்களிடம் முடிவு எடுக்கும் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும். வேலை மாற்றம் இடமாற்றம் தோல்வியையும் பொருளாதார இழப்பையும் தரும். நண்பர்கள் பகைவர்களாவார்கள் ஆதலால் எந்த ரகசியத்தையும் பிறர் களிடம் பகிர கூடாது. வெளிநாடுகளில் வசிப்பவர்களுக்கு வருமானம் அதிகரிக்கும், பொருளாதார வளர்ச்சி கிடைக்கும். வாழ்க்கை துணை அவமானத்தை சந்திக்கும காலம். ஆகையால் அனுசரித்து செல்வது பிரிவினையை தவிர்க்கும். துர்க்கை வழிபாடு பாதிப்புகளை குறைக்கும்.



## மீன ராசி

மீன ராசி நேயர்களே, திருமணம் கைகூடும். சிலருக்கு மறுமணம் ஏற்படும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். குடும்பத்தில் ஒற்றுமை ஏற்படும். உங்கள் கருத்துக்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படும். புதிய கல்விகள் கற்ப்பீர்கள் அது, தொழில் வளர்ச்சிக்கு உதவும் புதிய திட்டங்களால் லாபம் கிடைக்கும். எதிரிகள் தொல்லை நீங்கும். செய்வினை, பில்லி சூனியம் போன்ற பாதிப்புகளில் இருந்து வெளிவர முடியும். ஒரு சிலருக்கு உடல் நலம் பாதிக்கப்படலாம். மன அமைதி குறையும், உளவு சார்ந்த விஷயங்களிலும் குழந்தைகள் சார்ந்த விஷயங்களிலும் கவனமாக இருக்க வேண்டும். காளி வழிபாடு அனைத்து பாதிப்புகளை நீக்கி நன்மையைத் தரும்.

# உங்கள் படைப்புகள் எங்கள் இதழில் இடம் பெற வேண்டுமா?

இனிய சத்வித்யா வாசகர்களே! நமது மாத இதழில் உங்கள் ஆன்மீகக் கட்டுரைகளும் கருத்துகளும் இடம் பெற வேண்டுமா? உங்களுடைய அரிய ஆன்மீக படைப்புகளை எங்களுக்கு அனுப்புங்கள்! தகுதியானவை ஏற்றுக்கொள்ளப்படும்

கட்டுரைகள் கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி


Astroved.com Pvt.Ltd

**சத்வித்யா ஆன்மீக மாத இதழ்**

பிரின்ஸ் இன்ஃபோ பார்க், பிளாட் எண்.81-பி,
ஏ-பிளாக், 4வது தளம், 2வது பிரதான சாலை,
அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை 600058.

Email id:
magazine@astroved.com